R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM
JULY 2019
மலர் 24
இதழ் 7

For all your legal requirements
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
L & L LAW Solicitors
46 High street
Colliers wood
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# யாரை விட்டது ஆசை?

மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று அன்று கூறிய மைத்திரிக்கு இரண்டாம் தடவை போட்டியிடும் பதவி ஆசை வந்துவிட்டது. ஆனாலும், 19வது திருத்தம் தனக்கே ஆப்புவைத்து, அது ஆபத்தாகி விட்டது என்பதனால், வாய்க்கு வந்தபடி எல்லாம் கொக்கரிக்கிறார்.

2015ம் ஆண்டு, ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி அடிப்படையில் 19வது திருத்தம் செய்யப்பட்டது.

ஜனாதிபதியானதும் மைத்திரி எடுத்த முதலாவது நடவடிக்கை இது. மகிந்தா ஜனாதிபதியாக இருந்தபோது 18வது திருத்தத்தைக் கொண்டு வந்து, அதனூடாக இரண்டு தடவைக்கு மேலாக ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு 18வது திருத்தத்தை நிறைவேற்றி, மூன்றாவது தடவை போட்டியிட்டு மைத்திரியிடம் தோற்றுப் போனார்.

இனிமேலும் எவரும் மூன்றாவது தடவை போட்டியிடக்கூடாது என்பதற்கு பதினெட்டாவது திருத்தத்தை ஒழிப்பதற்காக 19வது திருத்தம் மைத்திரிக்கு அவசியமாகப்பட்டது. அது நிறைவேற்றப்பட்டபோது சபாநாயகராக இருந்தவர் சமல் ராஜபக்ஷ. பாராளுமன்றத்துக்கு ஜனநாயக பாரம்பரிய விதிகள் இருக்க வேண்டும் என்பதற்கு 19வது திருத்தத்தினால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டது.

முக்கியமாக அமைச்சரவை நியமனங்களை பிரதமரின் ஆலோசனையுடன் ஜனாதிபதி செய்ய வேண்டும், பொலிஸ் உயர்பதவிகளை போன்ற நியமனங்கள் அதற்குரிய ஆணைக்குழுக்கள் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்பதும் 19வது திருத்தத்தில் அடங்கியவை.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி, மகிந்தவை பிரதமராக நியமித்து பாராளுமன்ற அமர்வை காரணம் கூறாது தடை செய்தது போன்ற எதேச்சதிகார நடவடிக்கைகளை இலங்கை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்றவருக்கு அந்தப் பதவியில் இரண்டாம் தடவையும் அமரவேண்டும் என்ற ஆசை வந்தபோது 'மூக்குடை'படுகிறார். தற்போது அரசியல் எதிரியாகப் பார்க்கும் ரணிலை பிரதமர் பதவியிலிருந்து தூக்கி எறியவும், பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைக்கவும் 19வது திருத்தம் முட்டுக்கட்டையாக இருப்பது தனது எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி இருப்பதை உணர ஆரம்பித்துள்ளார்.

மொத்தத்தில்– 19வது 'திருத்தம்' என்பது தன்னைச் சுற்றி விரிக்கும் சூழ்ச்சி வலை என்று எண்ணுமளவிற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

சாதாரண ஒரு பிரஜைக்குக்கூடத் தெரிந்த அரசியல் அறிவு மைத்திரிக்கு இல்லை! அவரே 19வது திருத்தத்தை கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்ததை மறந்து, 'குத்துக்கரணம்' அடித்து, '19வது திருத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு' என்கிறார்.

பொறுப்பற்ற விதத்தில் பேசி பொருத்தமில்லாத கருத்துக்களைக் கூறி மக்களை ஏமாற்றலாமென நினைக்கிறார்.

பதவி ஆசை யாரைத்தான் விட்டது?

YOUR TUITION SOLUTION
GCSE Biology & Chemistry New (9-1)
Expert tutoring
Small Groups
Starting September 2019
07508516737
Mrs. Siva PhD
(CROYDON)

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
புடவைகள் அனைத்தும்
£9 பவுண்களிலிருந்து
அதிரடி மலிவு விலையில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலஞ்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



வட இலண்டன்
திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
59-69 Church Lane, Edmonton, London, N9 9PZ, United Kingdom
Tel: 0208 884 3333 I info@ambaal.org I www.ambaal.org
வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்
19.07.2019 - 07.08.2019
20.07.2019
சனிக்கிழமை காலை
11.30 மணிக்கு
துவஜாரோகணம்
(கொடியேற்றம்)
தேர்த்திருவிழா
04.08.2019 ஞாயிறு
காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை
கிரியாகால நிகழ்வுகள்
19.07.2019 - வெள்ளி -விநாயகர் திருவிழா
20.07.2019 - சனி காலை - துவஜாரோகணம் (கொடியேற்றம்)
02.08.2019 - வெள்ளி - கைலாசவாகனம், கற்பூரசட்டித்திருவிழா
03.08.2019 - சனி - சகோபரத்திருவிழா (சப்பறத்திருவிழா)
04.08.2019 - ஞாயிறு - (முத்தேர்பவனி) தேர்த்திருவிழா
05.08.2019 - திங்கள் - பஞ்சமூர்த்திபவனி, தீர்த்தம், மாலை கொடியிறக்கம்
06.08.2019 - செவ்வாய் - பூங்காவனம்
07.08.2019 - புதன் - பிராயச்சித்த அபிசேகம், பைரவர் மடை
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்) CHARITY -1143043

# சோரம்போன சாக்கடை அரசியலில் முக்கோணப் போட்டியும் மௌன ராகமும்

**சிங்கள தேசத்தில் முக்கோண அரசியல் போட்டி. மைத்திரியும் ரணிலும் உலகம் சுற்ற மகிந்த அறுவடைக்குத் தயாராகிறார். ஏமாற்றப்பட்டு எல்லாமிழந்து நிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இப்போது இந்தியப் பிரதமர் மோடியே நம்பிக்கை நட்சத்திரம். அதற்கும் உள்வீட்டுக்குள்ளேயே ஆப்பு வைக்கிறார் எம்.பி ஒருவர்.**

இனிவரும் மாதங்கள் - அடுத்து வரும் ஒரு வருட காலம் இலங்கையில் தேர்தல்களின் காலம்.



மாகாண சபைகள், ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் வரிசையில் முறைப்படி முதலில் நடைபெற வேண்டியது மாகாண சபைகள் தேர்தல்.

ஒன்பது மாகாண சபைகளுள் ஏழின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டதால் அவை இப்போது ஆளுனர்கள் ஆட்சியிலுள்ளன. ஜனாதிபதியின் தனிப்பட்ட தெரிவில் இவர்கள் நியமனமானதால், ஏழு மாகாண சபைகளும் பொம்மை ஆட்சியிலுள்ளன.


1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடகீழ் மாகாண சபை உருவாக்கத்துக்கு தற்காலிகமாக வழிவகுத்தது. ஆனால், சிங்கள நீதி நிர்வாகம் அரசமைப்பின் ஓட்டையை பயன்படுத்தி அதனை இரண்டாகப் பிரித்தது.

வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 26 ஆண்டுகளின் பின்னர் 2013ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்று, கடந்தாண்டு ஒக்டோபரில் ஆயுளை முடித்துக் கொண்டது.

ஏழு மாகாணங்களுக்குமான தேர்தல்கள் எப்போது என்று எவருக்குமே தெரியாது.

இந்தாண்டின் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் அடுத்தாண்டு யூலை - ஆகஸ்ட் முற்பகுதிக்குள் இடம்பெற வேண்டும். ஜனாதிபதி விரும்பினால் அடுத்தாண்டில் வரும் முதல் ஆறு மாதங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் இதற்கான தேர்தலை நடத்த சட்டத்தில் இடமுண்டு.

பெயரளவில் நல்லாட்சி என்ற இரு கட்சி இணைந்த அரசாங்கமே 2015 முதல் செயற்பாட்டில் இருந்தாலும், ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே அணியில் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் இவர்கள் இருவரும் இப்போது ஒருவரையொருவர் முகம் பார்ப்பதில்லை. இதனால், பாதுகாப்புச் சபை கூட்டங்கள், மந்திரி சபைக் கூட்டங்கள் என்பன ஜனாதிபதியால் பல தடவை தடை செய்யப்பட்டன.



கடந்தாண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமர் ரணிலை பதவி நீக்கி, தமது முன்னாள் சகாவான மகிந்த ராஜபக்சவை பிரதமராக்கி அரசியல் சதிராட்டம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரி நடத்தினாராயினும், அதில் அவரே முகங்குப்புற விழ நேர்ந்தது.

ஐம்பது நாட்களுக்குப் பின்னர் பிரதமர் கதிரை மீண்டும் ரணில் வசமாக, மகிந்த திடுதிப்பென எதிர்க்கட்சி தலைவரானார்.

நான்காண்டுகளுக்கு மேல் வரப்பிரசாதமாகக் கிடைத்த எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்த சம்பந்தன் அப்பதவியை இழந்தார். ஆயினும், அப்பதவிக்கான பங்களாவையும், அரச வாகனத்தையும் அவர் தொடர்ந்து வைத்திருப்பதாக சில நாட்களுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டதை இங்கு கவனிக்க வேண்டும்.

அரசியற் கதிரைகள் சக்கடத்தாரின் குதிரைபோல இடம்மாறி ஓடிக்கொண்டிருக்கின்றன. அரசியல் அனுபவமும் ஆற்றலுமில்லாத ஜனாதிபதி மைத்திரி தம்மைச் சுற்றி நரி வலைகளை அமைத்து நாடகமாடிக் கொண்டிருக்கிறார்.

இப்போது மகிந்தவும் இவரோடு இல்லை, ரணிலும் இல்லை. தனியான அஞ்சலோட்டத்தில் இவர்.

இதிலொன்று, சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி தமக்குரிய செல்வாக்கை மதிப்பீடு செய்ய நினைப்பது. இதனூடாக ரணிலையும் மகிந்தவையும் அடித்து வீழ்த்தலாமென நப்பாசை.

இதன் வழியாக நிலைமை சாதகமாகத் தெரிந்தால் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவார். அல்லது நாடாளுமன்றத்தை மக்கள் கருத்துக் கணிப்பை சாதகமாக்கி கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை முதலில் நடத்துவார்.

மொத்தத்தில், மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பது மூன்றாவது இடத்தில்தான் உள்ளது.

சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கையும் பயன்படுத்தி படுதோல்வி கண்ட நிலையிலுள்ள மைத்திரி, அடுத்து என்ன செய்வதென்று தெரியாமலும் புரியாமலும் தடுமாறுவதை உள்நாடு மட்டுமன்றி வெளிநாடுகளும் நன்கு கவனித்து வருகின்றன.

இதனாற்தான் போலும் தலதா மாளிகை (சிங்கள பௌத்த உயர்பீடம் - மகாசங்கம்) சொல்வதையே அனைவரும் செவிமடுத்து அதன்படி செயற்பட வேண்டுமென இவர் விடுத்துள்ள அறிவுரை போன்ற உத்தரவைப் பார்க்க முடிகிறது.



காவி உடைகளை முன்னிறுத்தி அவர்களின் ஆசீர்வாதத்துடனேயே அரசியலை வழிநடத்திய சிங்கள பௌத்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை புத்தரகித்த தேரோவும், சோமராம தேரோவும் என்ன செய்தார்கள் என்பது மைத்திரிபால மறந்திருக்க மாட்டார்.

வீடு பற்றி எரியும்போது அதன் உரித்தாளர்களான கணவனும் மனைவியும் ஊர் சுற்றச் சென்றால் பிள்ளைகள் நிலை எவ்வாறு இருக்கும் என்பதுபோல ஜனாதிபதியும் பிரதமரும் இப்போது நடந்து கொள்கிறார்கள்.

இருவரும் வாராவாரம் வெளிநாடு செல்கிறார்கள். ஒருவர் கிழக்கு நோக்கிச் சென்றால், மற்றவர் மேற்கு நோக்கிச் செல்கிறார். வெளிநாடுகளில்கூட தப்பித் தவறியாவது ஒருவரையொருவர் சந்தித்து விடக்கூடாதென்பதில் மிகுந்த அவதானமாக உள்ளனர்.

மந்திரி சபையானது தனித்து ஒரு கட்சி - ஐக்கிய தேசிய கட்சியினரை மட்டுமே கொண்டதாக இப்பேர்து உள்ளது. ஆனாலும், அவர்கள் தங்களுக்குள் பிணக்குப்படுவது மட்டுமன்றி, ஊடகங்க;டாக அறிக்கைப் போர் நடத்தி கழுத்தறுப்புச் செய்கிறார்கள்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலையடுத்து கூண்டோடு அமைச்சர் பதவிகளைத் துறந்த ஒன்பது முஸ்லிம் அமைச்சர்களின் ஒற்றுமையை அனைவருமே பாராட்டினார்கள். சிங்களத் தலைமைகள் இது கண்டு அச்சத்தால் நிலைகுலைந்தன.

ஆனால், இவர்களுள் இருவர் பல்டி அடித்துவிட்டு முன்னைய அமைச்சர் பதவிகளை மீளப்பெற்றுவிட்டனர். கபீர் காசீம், எம்.எச்.எம்.கலீம் என்னும் இவர்கள் இருவரும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் மீண்டும் அமைச்சர்களாகியதைவிட முக்கியமான விநோதம் என்னவெனில், இவர்களின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இவர்கள் மீள அமைச்சர்களாகியது தமக்குத் தெரியாதென்று பகிரங்கமாகக் கூறியிருப்பதே.

ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக இருந்தால், மற்றைய முஸ்லிம் அமைச்சர்களும் மௌ;ள மௌ;ள மீண்டும் தங்கள் கதிரைகளில் அமர்வதுகூட பிரதமருக்குத் தெரியாது போகலாம்.

சிங்கள அரசியல் அரங்கின் முக்கோணப் போட்டியை நுணுக்கமாக அணுகினால் ஒரு விடயம் தெரியவரும்.

ஒரே அரசாட்சியைச் சேர்ந்த ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எட்டாம் பொருத்தம். ஒருவரையொருவர் சந்திக்க விரும்பாதது மட்டுமல்ல மெதுமெதுவாக காலை இழுக்கும் வேலையையும் செய்கிறார்கள்.

ஆனால், இவர்கள் இருவருக்கும் விரோதியான எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தாம் விரும்பும்போதெல்லாம் ஜனாதிபதியையும் பிரதமரையும் தனித்தனியாகச் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுக்குத் தொடர்ந்து பறந்து கொண்டிருப்பதால் பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்குச் சந்திக்கக்கூடியவராக நாட்டில் இருப்பவர் மகிந்த மட்டுமே. இதனால் இவரது செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரிப்பது தவிர்க்க முடியாதது.

இனி, தமிழர் அரசியல் பக்கம் சற்றுப் பார்ப்போம்.

இரண்டாவது தடவையாகவும் இந்தியப் பிரதமராகியுள்ள மோடியே இப்போது கூட்டமைப்பின் நம்பிக்கை நட்சத்திரம்.

புதுடில்லிக்கு வாருங்கள், பேசுவோம் என்ற மோடியின் அழைப்பில் கரைந்து குழைந்து போயுள்ளனர் இவர்கள்.

இன்னமும் திகதி வழங்கப்படவில்லையாயினும் நால்வருக்கு மட்டுமே அழைப்பு என்பதால் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அழைப்புத் திகதியை வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றனர். எண்ணிக்கை நான்கு என்பதால் புளொட் சித்தார்த்தன் வெளியே.

இதற்கிடையே கூட்டமைப்பின் எம்.பி.யான சரவணபவன், மோடியால் என்ன பயன் என்று பகிரங்கமாக எழுப்பிய கேள்வி கூட்டமைப்புக்குள் அச்சம் கலந்த பரிதவிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமது உதயன் தினசரிக்கு எதிராக சுமந்திரன் புதிய சுதந்திரனையும், மாவை சேனாதிராஜா புதிய ஈழநாதத்தையும் வெளியிட ஆரம்பித்துள்ளதே சரவணபவனுக்கு கூட்டமைப்பின் மீதான கொதிப்பு என்கிறார்கள் உள்வீட்டுக்காரர்கள். இதன் பிரதிபலிப்பே மோடியின் சந்திப்பை நையாண்டி செய்த அவரது கருத்து என்கிறார்கள் இவர்கள்.

ஆனாலும் சரவணபவனிடம் இதுபற்றி விளக்கம் கேட்கவோ, விசாரணை நடத்தவோ சம்பந்தன் தயாரில்லை. (சரவணபவனின் மனைவி வழியாக சம்பந்தனுடன் உறவுண்டு என்றும் கூறப்படுகிறது).

ஏற்கனவே சிவசக்தி ஆனந்தன், வியாழேந்திரன் ஆகிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்றாவது ஆளாக சரவணபவனையும் இழக்க கூட்டமைப்பு விரும்பவில்லையாம். தேர்தல்கள் அடுத்தடுத்து வரவிருப்பதால் கொஞ்சக் காலத்துக்கு மௌன ராகமே நல்லதென சம்பந்தன் கருதுகிறார்.

நம்பிச் சென்ற பிரதமர் ரணில் நட்டாற்றில் விட்டுள்ளார். வாக்குச் சேர்த்து கதிரையிலேற்றிய ஜனாதிபதி வாலைக் காட்டுகிறார்.

இந்த நெருக்கடிகளுக்குள் புதிய நெருக்கடியையும் உருவாக்குவதா? வரப்போகும் தேர்தல்களும் இதற்கு மௌனமாகவே பதிலளிக்கும். *

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே–அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## நவாலியில் காணி விற்பனைக்கு

நவாலியில், மானிப்பாய்க்கு அருகாமையில் முதலியார் மகேசன் தெருவில் 8 பரப்புக் காணி (கிணறுடன்) விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு 8 லட்சம் ரூபாய்.

தொடர்புகளுக்கு:
**07903 681462**


## பெருமையுடன் அகவை 50!



யாழ்.கரவெட்டி நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய பிரதமகுரு, சாரதா பீடம் ஜோதிட நிலைய முதல்வர் கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் அவர்களுக்கு 23.07.2019 அன்று 50வது அகவை.

சமய ஜோதிட ஆன்மீகம் தொடர்பாக கடந்த 25 ஆண்டுகளாக இலங்கை மற்றும் வெளிநாடுகளிலுமுள்ள பத்திரிகைகளில் எழுதி வருவதுடன், 50க்கு மேற்பட்ட ஆலயங்களுக்கு ஊஞ்ஞல் பாட்டு எழுதி கவிஞர் என்ற முத்திரை பதித்துள்ளார். சமீபத்தில் இவர் எழுதிய 345 பக்க ஆய்வு நூலு லண்டனிலும் மற்றும் நாடுகளிலும் வெளியீடு செய்து பாராட்டுக்களைப் பெற்றார். லூய்ஷியம் நகரில் அமைந்த லண்டன் சிவன் கோயிலில் ஆரம்பகால குருவாக இருந்தவர். சைவ சமய குரு, ஜோதிடர், எழுத்தாளர், கவிஞர் எனும் பன்முக ஆளுமை கொண்டவர்.

***முன் கூட்டியே நிறைவான வாழ்த்துக்கள்.***


## அடுத்த இதழில் சைவ மாநாடு தொகுப்பு வெளிவரும்.


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

### JULY- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Monday | Annual Mahotsava Festival Starts | மகோற்சவம் தொடக்கம், 11.30 கொடியேற்றம் |
| 02 | Tuesday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| 03 | Wednesday | Sri Vinayakar & Sri Murugan Veethi Ula | காலை விநாயகர், முருகன் வீதியுலா |
| 04 | Thursday | Chandrasekar & Umaiyambal Veethi Ula | காலை விநாயகர், முருகன் வீதியுலா |
| | | Sri Murugan Veethi Ula | முருகன் வீதியுலா |
| | | Chandrasekar & Umalayambal, Murugan Veethi Ula | சந்திரசேகரர், உமையாம்பாள் முருகன் வீதியுலா |
| 05 | Friday | Chathurthi Viratham | சதுர்த்தி விரதம் |
| 06 | | Mor: Sri Murugan Veethi Ula | ஸ்ரீமுருகன் வீதியுலா |
| 07 | Sunday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| 08 | Monday | Aani Uththaram | ஆனி உத்தரம் |
| 09 | Tuesday | Mango Festival | மாம்பழத் திருவிழா |
| 10 | Wednesday | Sri Murugan Veethi Ula in Manjam | மாலை மஞ்சத்தில் ஸ்ரீமுருகன் வீதியுலா |
| 11 | Thursday | Sri Murugan Veethi Ula | காலை ஸ்ரீமுருகன் வீதியுலா |
| 12 | Friday | Vettai Thiruvila | வேட்டைத் திருவிழா |
| 13 | Saturday | Sapparam | சப்பறம் |
| 14 | Sunday | Chariot Festival | தேர்த்திருவிழா |
| 15 | Monday | Theertham | தீர்த்தம் |
| 16 | Tuesday | Muththukumar Thirukalyanam | முத்துக்குமார் திருக்கல்யாணம் |
| 17 | Wednesday | Vairavar Madai, Pongal | வைரவர் மடை, பொங்கல் |
| 20 | Saturday | Chankadahara Chthurthi | சங்கடகர சதுர்த்தி |
| 22 | Monday | Sasti | சஷ்டி |
| 24 | Wednesday | Apara Padcha Astami | அபர அட்டமி |
| 26 | Friday | (Aadi) Kaarthikai Viratham | ஆடிக்கார்த்திகை விரதம் |
| 28 | Sunday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 29 | Monday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 31 | Wednesday | Aadi Amaavaasai Viratham | ஆடி அமாவாசை விரதம் |






# சென்னையில் விமலின் பக்கங்கள்

## நூல் வெளியீடு




ஆழ்வார்பேட்டை ஸ்ரீசத்குரு ஞானாநந்தா மண்டபம்

தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் எழுதிய 'விமலின் பக்கங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னை ஆழ்வார்பேட்டை சத்குரு ஸ்ரீ ஞானாநந்தா–நாரதகான சபா மண்டபத்தில் ஜூன் 20 சனிக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது.

தமிழ் அறிஞர்களும் ஊடகத்துறையினரும் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர். சென்னைப் பல்கலைக்கழக இதழியல் துறைத் தலைவர் டாக்டர். கோபாலன் ரவீந்திரன் தலைமை தாங்கினார். நாரதகான சபா பொறுப்பாளர் வழக்கறிஞர் ஹரிசங்கர் கிருஷ்ணசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஊடகத்துறையினர்–விஜய திருவேங்கடம் (முன்னாள் அகில இந்திய வானொலி சென்னை நிலைய இயக்குநர்.)

பேராசிரியர் சம்பத் குமார் (முன்னாள் தூர்தர்ஷன் அறிவிப்பாளர் மற்றும் பிபிசி இலண்டன் தயாரிப்பாளர்)

பேராசிரியர் ஜெய் சக்திவேல்

கலைமாமணி சசிரேகா பாலசுப்ரமணியன்

திரு.சிவராமகிருஷ்ணன் (பிபிசி தமிழோசை)

ஆகியோர் விமலின் நூலைப் பற்றி உரை நிகழ்த்தினார்.

இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியின் மூத்த ஒளிபரப்பாளர் ரஜினி ராஜ்மோகன் நிகழ்ச்சி முன்நிலையாளராக பணியாற்றினார்.

செல்விகள் மாலினியும், சிவஸ்ரீயும் ஆரம்பத்தில் குரு வணக்கம் பாடியதோடு நிகழ்ச்சியின் முடிவில் சங்கீத சொற்பொழிவு செய்து நிறைவு செய்தனர்.



கலைமாமணி சசிரேகா பாலசுப்ரமணியன்



திருவேங்கடம் அவர்களுக்கு சிவஸ்ரீ அன்பளிப்பு வழங்குகிறார்.



பேராசிரியர் சம்பத்குமார் அவர்களுக்கு மாலினி அன்பளிப்பு வழங்குகிறார்.



விழா ஏற்பாட்டுக் குழுவினரோடு திருமதி.ராதா, ரஜினி, மாலினி மற்றும் நூலாசிரியர்.



குருஜி, சுவாமி ஹரிதாஸ்ரீயின் திரு.உருவத்தின் முன்னால் விமலின் நூல்கள் சமர்ப்பணம்.



மாலினியும் சிவஸ்ரீயும்.



அறிவிப்பாளர் ரஜினி ராஜ்மோகன்



வழக்கறிஞர் ஹரிஷங்கர் பேசுகிறார்.



அறிவிப்பாளர் ரஜினி, பேராசிரியர் ஜெய் சக்திவேல், வழக்கறிஞர் ஹரிசங்கர், திரு.விஜய திருவேங்கடம், டாக்டர் கோபாலன் ரவீந்திரன், கலைமாமணி சசிரேகா, நூலாசிரியர் விமல், திரு.சிவராமகிருஷ்ணன், திரு.சம்பத்குமார்.



மேடையில் பேச்சாளர்கள் அமர்ந்திருக்க அறிவிப்பாளர் ரஜினி அறிமுகம் செய்கிறார்.



Sky Wings Travel
SW
Your Travel Is Our Passion...
25 YEARS of EXCELLENCE
9.7 out of 10 Rating on Trustpilot
Shows that We Value You!
Trustpilot
SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT
WORLDWIDE SPECIALS
COLOMBO Fr £404
CHENNAI Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
MELBOURNE Fr £632
AUCKLAND Fr £683
NEW YORK Fr £314
SYDNEY Fr £602
TORONTO Fr £312
119 Tooting High Street, London, SW17 0SY
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
IATA
5766 ATOL PROTECTED

சக்தி சக்திதாசன்



# புதிய பிரதமர்

# பி ரெ க் ஸி ட்

## பூதத்தை திரும்ப எப்படி ஜாடிக்குள் அடைப்பார்?

மனதிலே எத்தனையோ தாக்கங்கள். சுற்றி அப்பப்போ நிகழும் நிகழ்வுகள் உள்ளத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களின் எதிரொலிகள் ஏற்படுத்தும் உணர்வலைகள்-ஆயிரம்எண்ணங்களை மலர்விக்கின்றன. ஆனால் இன்றைய இங்கிலாந்தின் உடனடி அரசியல் நிகழ்வுகள் கொடுக்கும் நாளாந்த மாற்றங்களின் தாக்கங்கள் அரசியல் களத்திலேயே நடமாட வைக்கின்றது. நடக்கும் அரசியல் மாற்றங்கள் எம் தனிப்பட்ட வாழ்வின் மீதுஏற்படுத்தும் தாக்கம் எவ்வகையாக இருக்கப் போகிறது எனும் ஆதங்கம் ஒருபுறம்,புலம்பெயர் வாழ்வினில் இந்நாட்டு பிரஜைகளாகி வாழ்ந்து கொண்டிருக்கும்வெளிநாட்டவராகிய எமக்கும், எமது தலைமுறைக்கும் இவ்வரசியல் மாற்றங்கள் எத்தகைய மாற்றங்களை அல்லது எதிர்மறையான விளைவுகளைக் கொடுக்கப் போகின்றது என்ற ஆதங்கம் மறுபுறம்.

நாம் பிறந்த மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து வேறொரு நாட்டில் குடியேறி அந்நாட்டிலேயே வாழத் தொடங்கும் நாம் படிப்படியாக எமக்கு வாழ்வளித்த இந்நாட்டைஎமது சொந்தநாடாக கருதும் நிலைக்கு எம்மை மாற்றிக் கொள்வது மிகவும் இலகுவானகாரியம் அல்ல. ஆனால் காலப்போக்கில் நாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்கள்,கலாச்சார விழுமியங்கள் ஆகியவற்றுக்கு முகம் கொடுத்து வாழும் நாட்டிற்கு உளசுத்தியுள்ள ஒரு பிரஜையாக வாழ எமை மாற்றிக் கொள்கிறோம். அத்தகையமாற்றத்தின் போது நாம் பிறந்த மண் எமக்குக் கொடுத்த மொழியின் மீதான காதலையும்,கலாச்சார அடிப்படையையும் தொலைத்து விடாமல் தக்க வைத்துக் கொள்வதற்கு நாம் எடுக்கும் நடவடிக்கைகளே ஒரு போராட்டம் தான். இப்படியாக வாழ்ந்து எமது அடுத்த தலைமுறைகளை இங்கே உருவாக்கி அவர்கள் முற்றுமுழுதாக இந்நாட்டு மண்ணின் குழந்தைகளாக, இந்நாட்டுச் சூழலிலே தமது வாழ்வாதரத்துக்கான வழிகளைத் தேடி வாழும் வாழ்க்கையின் போது நாட்டில் பல அரசியல் மாற்றங்களும், இந்நாட்டின் தொன்மை மக்களின் மனதில் ஏற்படும் கசப்பான புரிந்துணர்வுகளும் எமைச்சுற்றி ஏற்படுத்தும்மாற்றங்கள் ஒருவகை பீதியைத் தோற்றுவிக்கத்தான் செய்கிறது.



பதினெட்டிலிருந்து அறுபத்தியிரண்டு வரை இங்கிலாந்திலே ஓடிக்கொண்டிருக்கும் என்வாழ்க்கை எனும் ரயில் பயணத்தின் தண்டவாளங்களின் திசை இந்தச் சந்தியில் இத்தகையதோர் திருப்பத்தை ஏற்படுத்துவது கொஞ்சம் என்னைச் சிந்திக்க வைக்கிறது. பல வருடங்களாக இங்கிலாந்தின் பழம்பெரும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்குள் ஐரோப்பியஒன்றியத்தினுடனான உறவுகளின் மீதான அபிப்பிராய பேதங்களும், கருத்து மோதல்களும் கூர்மையடைந்து வந்த வேளையில் அது அக்கட்சியின் பல தலைவர்களைக் காலம் காலமாகக் காவு கொண்டு வந்துள்ளது. இக்கருத்து மோதல்களின் அதியுச்ச கட்டமாகவேஇன்று நாம் எதிர்கொள்ளும் இந்த "ப்ரெக்ஸிட்" எனும் அரசியல் பூதம். இந்தப் பூதம் அடைத்து வைக்கப்பட்ட கண்ணாடிக் கூஜாவிலிருந்து வெளிப்பட்டு அரசியல்களத்தினில் ஆட்டம் போட்டு இன்றைய பிரதமர் தெரேசா மே அவர்களையும் பலிகொண்டு நிற்கிறது.

தெரேசா மேக்குப் பதிலாக புதிய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரையும், இந்நாட்டின்அடுத்த பிரதமரையும் தெரிவு செய்யும் பொறுப்பு *313* கன்சர்வேடிவ் கட்சிப் பாரளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் விடப்பட்டு அவர்களின் வடிகட்டலின் பின் மிஞ்சும் இரண்டு உறுப்பினர்கள் கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்களாக இருக்கும் சுமார் *160000* பேர்களின்வாக்கெடுப்பினால் அடுத்த தலைவர் அதாவது எமது நாட்டின் பிரதமரைத் தெரிவு செய்யும்திருவிழா ஆரம்பமாகி விட்டது. *11* பேர் ஆரம்பத்தில் குதித்த இந்தத் தலைவர் தேர்தலில் இன்று இருவர் மிஞ்சி நிற்கிறார்கள். யார் இவர்கள்? முன்னாள் லண்டன் நகர மேயராக இருந்த பொரியூஸ் ஜான்சன் இவர்களிலொருவர் இவரே சக பாராளுமன்ற அங்கத்தவரிடையே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர். இவர் தெரேசா மே அவர்களின் அமைச்சரவையில் வெளிநாட்டமைச்சர் பதவியிலிருந்தவர். தெரேசா மேயின் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகும் உடன்படிக்கையோடு ஒத்துப் போகாமல் தனது பதவியைஇராஜினாமாச் செய்தவர்.

அடுத்தவர் ஜெர்மி ஹண்ட். இவர் இங்கிலாந்தின் தற்போதைய வெளிநாட்டமைச்சர்,முன்னாள் தேசிய சுகாதார அமைச்சர். இவர்களில் போரிஸ் ஜான்சன் ஐரோப்பியஒன்றியத்திலிருந்து அது ஐக்கிய இராச்சியத்துக்குக் கடிசியாகக் கொடுத்த காலக்கெடுவானஅக்டோபர் *31*ம் திகதி உடன்படிக்கையுடனோ அன்றி உடன்படிக்கை இல்லாமலோவிலகுவது என்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறிக் கொள்கிறார். ஜெர்மி ஹண்ட் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உடன்படிக்கையை எட்டக்கூடியபட்சத்தில் ஒரு சிறிய காலதாமதம் ஏற்பட்டாலும் கூட அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒன்றே என்று கூறுகிறார். ஆனால் தற்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடான தேரேசா மே அவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதின் அடிப்படையில் இவர்கள் இருவரினது,ம்நிலை திரிசங்கு சொர்க்கமே !



ஐரோப்பிய ஒன்றியத்துடன் எதுவித உடன்படிக்கையும் எட்டப்படாத பட்சத்தில் உடன்படிக்கை இல்லாமல் விலகுவதே சட்டத்திலுள்ளது. ஆனால் அரசு ப்ரெக்ஸிட் சம்பந்தமாக எடுக்கும் எந்த நடவடிக்கையும் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இது சம்பந்தமாக நடைபெற்ற ஒரு வழக்கின் தீர்ப்பாக உள்ளது.பாராளுமன்றத்தில் இங்கிலாந்து எதுவித உடன்படிக்கையும் இல்லாமல் வெளியேறுவது என்பது பெரும்பான்மை உறுப்பினர்களால் பலமுறை நிராகரிக்கப்பட்ட ஒன்று.இந்நிலையில் தெரிவு செய்யப்படும் புதிய பிரதமர் எவ்வகையில் இந்த பிரெக்ஸிட் எனும் பூதத்தைத் திரும்ப ஜாடிக்குள் அடைக்கப் போகிறார் என்பது ஒருவராலேயும் புரிந்து கொள்ள முடியாமலே இருக்கிறது.

சரி தெரிவு செய்யப்படும் பிரதமர் யாராக இருப்பினும் அவர்கள் முன்னால் இருக்கும் பிரெக்ஸிட் எனும் பிரச்சனை முக்கியமானதாக இருப்பினும் அது நாட்டின் ஒரேயொரு பிரச்சனை தான் ! அதன் பின்னால் நாட்டின் பல பிரச்சனைகள் இன்னும் முகம் கொடுக்கப்படாமல் இருக்கின்றதே! அதனை அவர்கள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் அதைப்பற்றிய அவர்களின் கொள்கைகளுக்கு சரியான வகையில் முக்கியத்துவம்ஊடகங்களில் கொடுக்கப்படுக்கின்றனவா? மக்கள் அதனைச் சரியான வகையில்உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்களா? என்பது சந்தேகமே ! ப்ரெக்ஸிட் எனும் இப்பூதம் நாட்டினை இரண்டாகப் பிளவு படுத்தி வைத்திருக்கின்றது. வெளிநாட்டவர் குடியேற்றம் அல்லது இமிகிரேஷன் எனும் பிரச்சனை

வெள்ளை இனத்தவர் மத்தியில் பலரின் மனங்களிலெ சிறிது இனத்துவேஷ விதைகளைத் தூவியிருக்கிறது. இனத்துவேஷத்தையே கொள்கையாகக் கொண்ட சில கட்சிகள்இந்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ளார்கள். மனதில் பட்டதை அப்படியே பேசும் உண்மையான அரசியல்வாதிகளின் மீது தான் எமது அபிமானம் எனும் மக்கள் கூட்டம் அமேரிக்காவில் அதிபர் ட்ரம்ப் பெற்ற வெற்றிக்குப் பின் இங்கிலாந்திலும்தலைவிரித்தாடுகின்றது. வெளிநாட்டவரின் வருகை இந்நாட்டின் மக்களுக்கு ஏற்படுத்தும் இடர்களை பகிரங்கமாக விவாதிப்பது ஜனநாயகமே எனும் வாதம் ஒரு சரியான வாதமாகப் பட்டாலும் இந்தப் போர்வையின் கீழ் பல இனத்தூஷம் கொண்டவர்கள் தமது இனவெறிக்கு நியாயம் கற்பிக்கும் நிலையொன்று ஏற்பட்டிருக்கிறது.

இத்தகைய நிலையைச் சரி செய்து வீழ்ந்து கொண்டிருக்கும் தமது கட்சிகளின்செல்வாக்கை மீண்டும் அதிகரித்துக் கொள்வதற்காக வழமையாக மிதவாதப் போக்குக் கொண்ட இங்கிலாந்தின் பெரும் அரசியல் கட்சிகளான கன்சர்வேடிவ் கட்சியும், லேபர்கட்சியும் தமது போக்கினை வெளிநாட்டவருக்கெதிரான வகையில் கொஞ்சம் கடுமையாக்கிக் கொள்வார்களோ எனும் அச்சம் மேலோங்கியுள்ளது. இந்த ப்ரெக்ஸிட் எனும் சிக்கலான பிரச்சனையில் இந்நாட்டு பெரும்பான்மை இனத்தவரின் கருத்துக்களோடு ஒன்றிப் போகும் வகையில் அரசியல் களத்தில் விளையாடும் நைஜல் வராஜும் அவரது கட்சியான ப்ரெக்ஸிட் கட்சியும் இங்கிலாந்து அரசியல் மேடையில் முக்கியத்துவம் பெறப் போகிறதா?

இந்நிலையில் தான் இன்றைய எமது கேள்வியான இங்கிலாந்தின் அடுத்த பிரதமர் யார் ?எனும் கேள்வி எனைப் போன்ற புலம்பெயர்ந்து வாழும் இங்கிலாந்து நாட்டுப் பிரஜைகளின் மனதில் மேலோங்கும் ஒரு ஆதங்கம் மிக்க கேள்வியாக மேலோங்கி நிற்கிறது. பல சமயங்களில் கட்டுப்பாடின்றி மனதில் தோன்றுவதை அப்படியே பேசி பலபிரச்சனைகளுக்குள் சிக்கிக் கொள்ளும் பொரிஸ் ஜான்சன் அவர்களே பிரதமராவர் எனும்எதிர்பார்பார்ப்பு அரசியல் அவதானிகள் மத்தியில் நிலவுகிறது. தனது பூட்டனார் துருக்கி நாட்டிலிருந்து அகதியாகக் இங்கிலாந்துக்கு தஞ்சம் தேடி வந்தவர். அந்த வழியில் வந்த நான் எப்படி இனத்துவேஷம் கொண்டவராக இருக்கலாம் எனும் வாதத்தை இவர் முன் வைக்கிறார். அதேபோல நான் வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருப்பது ஒரு சீன நாட்டுப்பெண்ணையே, நான் எப்படி வெளிநாட்டவருக்கெதிராக இயங்குவேன் என்கிறார் ஜெர்மிஹண்ட்.

இதற்கான முடிவு ஜூலை மாதம் *22*ம் திகதியே எமக்குத் தெரிய வரும். அடுத்து வரும் ஒரு*50* வருட காலத்தின் ஐக்கிய இராச்சியத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகும் பிரதமரை நாட்டின் கன்சர்வேடிவ் கட்சியின் வெறும் வெறும் *160000* மக்கள் மட்டும் தெரிவு செய்வதுதான் உலக ஜனநாயகத்துக்கே முன்னோடியாகத் திகழும் ஐக்கிய இராச்சியத்தின்ஜனநாயகமோ எனும் கேள்வி பல முனைகளில் இருந்து கிளம்பாமலில்லை.

எதிர்காலம் எனும் கண்ணாடி சாளரத்தினூடாக என்ன தெரிகிறது என்று ஆவலோடுஎதிர்பார்த்திருக்கும் லட்சோப லட்ச மக்களில் நானும் ஒருவன். •

# World Tour Store

## கொழும்பிற்கான சிறந்த பிரயாண ஏற்பாடு செய்ய எம்மை நாடுங்கள்

**15 YEARS**
**of trusted service**

# COLOMBO fr £449



## Worldwide Flight Deals

| | |
|---|---|
| DUBAI | fr £299 |
| TORONTO | fr £365 |
| CHENNAI | fr £359 |
| SYDNEY | fr £697 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Hyderabad | fr £410 | Delhi | fr £359 | Bangkok | fr £413 |
| Kochi | fr £385 | Goa | fr £459 | Singapore | fr £408 |
| Mumbai | fr £388 | Abu Dhabi | fr £299 | New York | fr £279 |

**FLY NOW PAY LATER OR BOOK WITH A DEPOSIT**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

BEST DEALS CHEAP FLIGHTS BEST DEALS

**Wembley**
Unit 3 A, Plaza Parade, 29-33
Ealing Road, Wembley, HA0 4YA.

**Lewisham**
111b, Loampit Vale,
Lewisham SE13 7TG

3550 ATOL PROTECTED

*Above fares & offers are subject to availability. T&C's Apply.



ப.வை. ஜெயபாலன்



# விட்டுப்போன சொத்து பட்டுப்போன சொந்த பந்தம்

**1960**இல் என்று நினைவு. போரில் நடந்த ஒரு நிகழ்வு. அக்கம் பக்கமாக ஒரு காணி. இரு சகோதரிகளுக்கு சீதன வழி சொத்து. இடையே முள்முருக்கை கதியால் வேலி. இது எல்லை வேலி. இரு காணிக்கும் ஒரே ஒரு கிணறு. மறுகாணியாளருக்கும் தண்ணீர் பங்கு உரித்து உறுதியில் உறுதி செய்யப்பட்ட உரிமை. எல்லை வேலி பிழை என்பது கிணறுள்ள காணிக்காரரின் வாதம். சண்டை, சச்சரவு, தொடர்ந்து சகோதரர் உறவு அறுந்த நிலை. ஒரு குடும்ப கணவன் சண்டித்தனக்காரன். எல்லை வேலி பற்றிய அதிருப்தியில் இருந்தவன். இரவோடு இரவாக குழை வெட்டப்பட்டு வெறும் கதியாலாக எல்லை வேலி இருந்த ஒரு பொழுதில் எல்லை வேலியை ஒரு முழம் தள்ளி அடைத்து இரவோடு இரவாக நடந்த எவரும் அவதானிக்க முடியாது செய்து விடுகிறான். குட்டு வெளிப்பட ஓர் இரு மாதம் எடுத்தது. கெட்டு விட்டு, கதியால்கள் அடைத்த நிலை. அப்படி இல்லை என்பது செய்தவன் வாதம். கோடு, கச்சேரி என்று அலைந்து; இருந்த பணமும் தொலைந்து; காணிப் பெறுமதியைவிட செலவு பல நூறு மடங்கானது. இது ஒரு எல்லை சண்டை. ஒவ்வொரு ஊரிலும் இவ்வாறு பல எல்லை தகராறு, வாய்க்கால் வழி தண்ணீர் சண்டை இருந்த காலம் அது.

யுத்தம் மூண்டது. ஷெல் அடி, இராணுவ முன் நகர்வு என்று காலாகாலம் சந்ததி வழி வந்த காணியை இழந்து உயிரைக் காக்க அகதியாகி அவதிப்பட்ட காலம்; எல்லோரும் அறிந்த ஒன்று. வீடுகள் தரைமட்டம். புல், பூண்டு, செடி, கொடி பாம்புப் புற்று என்று வீட்டுக்காணிகள் பற்றைக்காடானது. அகதி முகாம் வாழ்வு. இடம் பெயர்ந்த அவலம். ஊர் ஊராக மாறி எவர் வீட்டுத் தாழ்வாரத்திலேயோ படுத்து உறங்கிய நிலை. அப்பொழுதும் கூட காணி உறுதி, நகை நட்டு, இரத்தத்தில் ஊறிய சாதித்திமிர் விட்டுப் போகவில்லை. இடைகட்டு துணியிலோ, தலையணை முடிச்சிலோ சொத்துப்பத்து பத்திரங்கள் பத்திரமாக பாதுகாக்கப்பட்டன.

“நாடி வருவது அந்த பாவ புண்ணியம் அல்லாது நாம் அரையில் அணியும் கோவணமும் வராது” என்ற பற்றற்ற நிலைக்கு அந்த அவலத்திலும் கூட ஒரு பட்டினத்தார்களும் உருவாகவில்லை. மாறாக வெளிநாட்டு புலம் பெயர்வு. கடின உழைப்பு. தேடல் என்ற முயற்சிகள் தொடர்ந்தன. 2009இல் மீண்டும் போர் முடிவுக்கு வந்தது. எங்கள் ஊர்; எங்கள் காணி என்ற உரிமை வேட்கை உயிர் பெற்றது. மீள் குடி அமர காணியை கோரும் போராட்டம் இன்றும், பத்து ஆண்டுகள் கடந்தும் தொடர்கிறது. இவை நியாயமான தேவைகளுக்காக நடக்கும் போராட்டங்கள்.

இங்கு அகதியாக வந்து, ஓரளவேனும் வசதிகள் தேடிக் கொண்டவர்களுக்கும் ஏனையோருக்கும் கூட, ஊன்றிய காலை எடுத்து மீண்டும் ஊர் திரும்ப மனம் இல்லை. இந்நாட்டை தம் நாடாக பழக்கப்படுத்திக் கொண்ட பிள்ளைகள் திரும்பிச் செல்ல தயாராக இல்லை. ஆனால், ஊரில் உள்ள தம் காணி, வழிவழி வந்த முதிசம், சீதனம் என்பவற்றில் உள்ள பற்றும் அற்றுப் போகவில்லை. ஆண்டுக்கு ஒரு முறையேனும் விடுமுறைக்கு போய் தங்கிவர ஒரு காணி வேண்டும் என்ற எண்ணம், நியாயமான ஆசை.

இங்கேதான் பிரச்சனையின் ஆரம்பம். மீண்டும் தொடரும் எல்லைச் சண்டை. சொத்துச் சச்சரவு. சைவ சமய கோயில்களின் ஒன்றிய மகாநாட்டில், ஊரில் இருந்து ஆதினங்களை அழைத்து பேச்சை கேட்க ஆசை. முத்தி பெறும் விருப்பம் எழுந்தாலும் மண்டப வாசலை கடக்கும் போதே அந்த ஆசை அறுந்து விடுகிறது. பிள்ளைகள், பேரர், வீடு, குடும்பம் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு என்று தேட்டத்துக்கான ஓட்டம். ஊர் சொத்தும் பிள்ளைகளுக்கு கவர வேண்டும் என்ற நாட்டம். ஊர்த்திரும்பி, காணியை மீட்டு துப்புரவாக்கி, ஒரு வீட்டைக்கட்டி, அதில் நம்பிக்கையானவர்களை இருத்தி, சுற்றுச்சூழலில் பயன்மரங்கள், பயிர்கள், செடிகள் என்று வளர்த்து... என்று இங்கு இருந்தபடியே அங்கும் ஆசை விட்டுப் போகாது ஒட்டி நிற்கும் ஊர்வாசம்.

ஆனால், அங்கு இருப்பவர்களுக்கும் பேராசை. இவர்கள் வெளிநாட்டுக்காரர். இவர்களுக்கு ஏன் காணி என்ற எண்ணம் மீண்டும் சகோதர சண்டைகள்...அடிபிடி என்று போரின் பின்பு விடுபட்ட காணிகளால் விட்டுப் போகும் உறவுகள்.

ஊரில் இருக்கும் என் ஒரே ஒரு அண்ணன் கேட்கிறான் என்று அவனுக்கு ‘பவர் ஓவ் அற்றொனி’ காணியை பராமரிக்க என்று கொடுத்தேன். இப்போ போனால் என் வீடு, காணி எல்லாம் விலைப்பட்டு போய்விட்டது. விற்கும் உரிமையும் உள் அடக்கம் என்பது எனக்கு சொல்லப்படவில்லை. நம்பி கை எழுத்து வைத்தேன். நாசமறுத்துப் போட்டான். இது இங்கு இருக்கும் ஒரு தம்பியின் புலம்பல். அந்த அண்ணனின் மரணச்சடங்குக்கு கூட போகாமல் மரத்துப் போனது சகோதர பாசம்.

“இவர் இயக்கத்திலை இருந்ததால் ஊருக்கு போறது பிரச்சனை. சித்தி போனவ. காணிக்கு எல்லை போட காசும் குடுத்துவிட்டம். இப்ப பாத்தா தன் காணியோட எங்கடை காணியையும் வித்துப் போட்டா. எங்களுக்கு சொல்லேலை. காசும் தரவில்லை” இது இங்கு இருக்கின்ற என் நண்பர்; இங்கு இருக்கும் தன் சித்தி பற்றி சொல்லும் முறைப்பாடு. இரு பகுதியும் இங்கு உறவு அறுந்த நிலை.

“இடிபட்ட வீட்டை திருத்த அங்கே இருந்த தம்பிக்கு காசு அனுப்பினம். வெளிநாடு போல கோடைக்கு குளிர்சாதனமும் பொருத்தி வீட்டை நம்பி நல்லா வைச்சிருந்தான். எங்களுக்கும் திருப்தி. ஒரு நாட்காலை நேரம் வீட்டில் காணி எழுதுற நொத்தாலிசு வந்து நிற்குது. வெளிநாட்டுக்காரர் இங்கை சொத்து வெச்சிருக்க ஏலாது எண்டு சட்டம் வரப்போகுது. என்ற பேருக்கு வீட்டையும் காணியையும் எழுதுங்கோ. நீங்கள் வரலாம் தங்கலாம் என்றான் தம்பி. தம்பின்ரை மனுசியும் கெஞ்சிக் கேட்டுது. எங்களை யோசிக்க விடேல்லை. எழுதிக் கொடுத்தம். இப்ப இந்த முறை போனா ஒரு செவ்விள நீர் பிடுங்க விடேல்லை. மரத்தில் ஒரு மாம்பழம் ஆசைக்கு சாப்பிடத் தரவில்லை. எல்லாம் குத்தகைக்கு கொடுத்தாச்சாம். மற்ற இரண்டு காணிக்கும் கையெழுத்து வாங்கினவை. அது இரண்டும் வித்துப் போட்டினம்.” இது இங்கு வாழும் ஒரு அண்ணனின் இதயக்குமுறல். இது தொடர்பாக இங்கு அவருக்கும் அவர் மனைவிக்கும் இடையே அடிக்கடி முறுகல். இருந்த தொலைபேசி உரையாடல் தொடர்பும் இப்பொழுது அறுந்த நிலை.

அன்றும்தான். இன்றும்தான். ஆசைக்குள் பாசங்கள் கரைந்து காணாமல் போய்விடுகின்றன. “ஊரில் உள்ளவர்களுக்கு கடன், பிற இல்லாத சுக வாழ்வு. இங்கிருந்து அனுப்பப்படும் பணத்தில் ஏக போகம்” என்பது இங்கு வீட்டுக்கடன், வீட்டுவரி, மின்சாரம் எரிவாயு என்று அவலப்படும் வெளிநாட்டுக்காரரின் மன குமுறல். ஆனால், அங்குள்ளவர்களுக்கோ இங்கு உள்ளவர்கள் இல்லங்கள் ஒவ்வொன்றிலும் காசு மரம் காய்த்து, பழுத்துச் சொரிகிறது என நினைப்பு. ஆக, இந்த இழுபறிகளில் அறுந்து போகின்ற உறவுகளின் தொகையை அதிகரிக்க செய்ததிலும் கூட போரின் காரணமாக புலம் பெயர்வு வெற்றி கண்டுவிட்டது.

அங்கு ஊரில் வாழும் அப்பா, அம்மாவின் உறவினர்களோடும் அவர்களின் பிள்ளைகளோடும் இங்கு வளரும் சந்ததிகளுக்கும் தொடர்பு அறுந்த நிலை; இத்தகைய உறவுப் பிரிவுகளால் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் சந்ததிகள்; தாய் மண்ணையும் அங்கு வாழும் தம் உறவுகளோடுள்ள தொடர்புகளையும் இழந்திருக்கும் நிலை. அவர்களுக்கு அது இனி தாய் நாடு அல்ல. அது அப்பா, அம்மாவின் தாய்நாடுதான். இத்தகைய சொத்து சண்டைகள், சந்ததி வழி சொந்த பந்த உறவு அறுந்து போகவும் எல்லை வேலி போட்டு விடுகின்றன. பட்டுப்போன உறவு விட்டுப்போன சொத்து. தாயக நேயம், நொய்ந்து போகும் பரிதாப நிலை. ●

மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**

# ஓய்வு

## REST & RELAX



> தனிமைக்கும், ஓய்வுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஓய்வு நேரத்தில் மீன் பிடிக்கலாம், காரோட்ட முடியாது. ஆற்றில் தூண்டிலைப் போட்டு, அமைதியாக உட்கார்ந்து பிடிப்பது ஓய்வாக (Relax) இருக்கும்.

ஓய்வு என்பதும் ஒரு வேலையே. வெள்ளைக்காரர்கள் வேலையை (*JOB*) அடிக்கடி மாற்றும் பழக்கமுடையவர்கள். வேலை கிடைப்பதும் சுலபம். பிடிக்காத வேலையை உதறித் தள்ளுவதும் சுலபம். வேலைவாய்ப்பு மிகுந்துள்ளதால் வேலை மாற்றம் சுலபம். முதல்வேலையை விட்ட பின் அடுத்த நாளே புதிய வேலையில் சேரமாட்டார்கள். அடுத்த வேலைக்குச் சேருமுன்பு ஒரு *BREAK* எடுப்பார்கள். *HOLIDAY* போவார்கள். காரணம், முந்தைய வேலையின் சிந்தனை மற்றும் மனநிலையிலிருந்து விடுபடவும், புதிய இடத்திற்கும், வேலைக்கும் தன்னை தயார்படுத்திக் கொள்ளவும் இந்த *HOLIDAY- BREAK-* ஓய்வு பெரும் உதவியாக இருக்கும் என்பது அவர்களது எண்ணம். புதிய வேலையில் சேர்ந்த பின், மனமகிழ்ச்சியுடன் பணியாற்றத் தொடங்குவார்கள்.

நோயுற்றிருக்கும் ஒருவருக்கு அவரின் வியாதியின் தன்மையையும், தீவிரத்தையும் பொறுத்து (*Disease Type and Intensity*) சிகிச்சை முறைகள் மாறுபடும். அவர்களில் சில நோயாளிகள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டி இருக்கும். சில நோயாளிகள் மட்டுமே அறுவைச் சிகிச்சைக்காக (*Surgical Treatment*) மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள். பெரும்பாலானோர் மருத்துவ சிகிச்சைக்காகவே (*Medical Treatment*) மருத்துவமனையில் தங்க வைக்கப்படுவார்கள். அந்த நோயாளிகளுக்கு அடிக்கடி பரிசோதனைகள் செய்யப்படும். நேரம் தவறாமல் மருந்துகள் கொடுக்கப்படும். தேவையான உணவும், குறித்த நேரத்துக்கு அவருக்குக் கொடுக்கப்படும். அந்த நோயாளருக்கு மருத்துவமனையில் சிகிச்சை மற்றும் உணவு மட்டுமின்றி தாராளமான ஓய்வும் தடையின்றி கிடைக்கும். இந்த ஓய்வே அவருக்கு நோயிலிருந்து மீண்டு வர பேருதவியாக இருக்கும். ஓய்வும் சிகிச்சையின் ஒரு அங்கமே. சில நேரங்களில் உற்றார், உறவினர், நண்பர்கள் புடைசூழ மருத்துவமனைக்கு விஜயம் செய்து, ஆபத்தான ஆறுதல் மொழிகளாகக் கூறி அவருடைய ஓய்வுக்கும் சிகிச்சைக்கும் பாதிப்பு உண்டாக்கக் கூடாது என்பதற்காகவே பார்வையாளருக்கு நேர வரையறையும் (*Visitors Time*) சில சமயங்களில் தடையும் கூட விதிக்கப்படுகிறது. மருத்துவமனைகளில் விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைவரும் நடந்து கொண்டால் நோயாளிகளுக்கு நல்ல ஓய்வும், தடையற்ற சிகிச்சையும் கிடைக்கப்பெற்று விரைவில் குணமடைவார்கள்.

ஓய்வு எடுப்பது ஒரு கலை. (*Rest is an Art*). ஆனால், இன்று ஓய்வு என்றால் என்ன என்றே தெரியாத காலத்தில் வாழ்கிறோம். ஓய்வு குறித்த



சரியான புரிந்துணர்வு இல்லாத சமூகமாக மாறிவிட்டோம். எந்த நேரமும் ஏதோ ஒரு குப்பையை கிளறிக் கொண்டே இருக்கிறோம். தனிமைக்கும், ஓய்வுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஓய்வு நேரத்தில் மீன் பிடிக்கலாம், ஆனால் காரோட்ட முடியாது. ஆற்றில் தூண்டிலைப் போட்டு, அமைதியாக உட்கார்ந்து மீன் பிடிப்பது ஓய்வாக (*Relax*) இருக்கும்.

விபத்துக்கோ, விபரீதத்துக்கோ வாய்ப்பே இல்லை. மாறாக ஓய்வு நேரத்தில் காரோட்டினால், விபத்தும், விபரீதங்களும், நெருக்கடிகளும் நேரிடும். எது ஓய்வு? (*Relax*) எது உளைச்சல் (*Stress*) என்பதை அடையாளம் காண்பது அவசியம்.

ஓய்வு என்றால் என்ன? கருவுற்றிருக்கும் பெண்களுக்கு ஓய்வு அவசியம். கர்ப்ப காலத்தில் ஓய்வாகவும், அமைதியாகவும் (*Relax and Calm*) இருப்பது கருவுற்றிருக்கும் தாயின் உடல் ஆரோக்கியத்துக்கும், கருவில் வளரும் குழந்தையின் உடல் மன வளர்ச்சிக்கும் சுகமாகக் குழந்தை பிறப்பதற்கும் மிக மிக அவசியம். நாள்தோறும், நாம் காணும் கர்ப்பிணிகள் நிலை என்ன? அமைதியாக இருக்கின்றார்களா அல்லது ஓடித்திரிகின்றார்களா? உற்றுநோக்கினால் உண்மை தெரியும். அமைதியற்று, ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கும் தாயின் கருவில் வளரும் எதிர்காலத் தலைமுறையின் உடல் ஆரோக்கியமும், மனநிலையும் எப்படி இருக்கப் போகின்றது? கவனம் செலுத்த வேண்டாமா? அடுத்த தலைமுறையின் ஆரோக்கியம் அவசியமல்லவா? ஓய்வு என்பதன் அர்த்தம் படுத்திருப்பதோ, நித்திரை கொள்வதோ மட்டும் இல்லை. அவசியமயற்ற வேலைகளையும், வீண் சச்சரவுகளையும் தவிர்த்துக் கொண்டாலே தரமான ஓய்வு கிடைக்கும்.

உழைப்பிற்கும், உறக்கத்துக்கும் இடைப்பட்டதே ஓய்வு. உழைத்துக் கொண்டே உறங்க முடியாது. உழைத்துக் களைத்த பின், சிறிது ஓய்வு எடுத்து அமைதியாகப் படுக்கைக்குச் சென்றால் ஆழ்ந்த தூக்கம் வரும். அமைதியின்றி படுக்கைக்குச் சென்றால் துக்கமும், வருத்தமும் (*Worries and Disease*) வரும். சரியான ஓய்வு, ஆரோக்கிய வாழ்வின் அடித்தளம். அமைதியும், ஓய்வுமின்றி உளைச்சலுடன் (*Stress*) ஓடிக் கொண்டிருப்பதே மாரடைப்பு நோய்க்கு (*Heart Attack*) முக்கிய காரணமாகும். இதுவே ஓய்வின் முக்கியத்துவத்துக்கு சரியான உதாரணமாகும். ஓய்வு என்பது நோய்த்தாக்கம் ஏற்படாதிருக்கவும், நோயுற்றால் விரைவில் சுகம் பெறவும் அவசியமான சிகிச்சை என்றே கருத வேண்டும். அனைத்து நோயாளிகளுக்கும் எல்லாவிதமான மருத்துவ





சிகிச்சைகளுடனும் சரியான, தரமான (*Quality-Rest*) ஓய்வு பரிந்துரைக்கப்பட வேண்டியது மிகமிக அவசியம். மூட்டு வலிக்கு (*Joint Pain, Arthratis*) ஓய்வே முதல் மருந்து. (*Rest is the First Medicine*) மருந்துகளும் பயிற்சிகளும் இரண்டாம் பட்சமே. உடற் பயிற்சிகள் (*Exercise and Therapy*) சில நேரம் மூட்டு நோவை (*Join Pain*) கூட்டி விடும். பொருத்தமான ஓய்வும், பக்க விளைவுகளற்ற ஹோமியோபதி சிகிச்சையும் எல்லாவிதமான நோயாளிகளுக்கும் சுகமளிக்கும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**

# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

**MRT**

**Menstrual Regulation Treatment**



ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation





ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects



அதீத ரத்தப்போக்கு
Over Bleeding




கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




PCOD
சினைப்பை நீர் கட்டி

## சிறப்பு சிகிச்சைகள்




பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்

பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)




உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

# HOMOEO CARE

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோவில்

## London Sri Murugan Temple

78-90 Church Road, Manor Park London E12 6AF Tel : 020 84788433

# தேர்த்திருவிழா 28.07.2019 ஞாயிறு

**இங்கிலாந்து தேசத்தில் புகழ்பெற்ற இலண்டன் ஸ்ரீமுருகன் தேர்த்திருவிழா 28.07.2019 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. 20.07.2019 சனிக்கிழமை கொடியேற்றமும், 28.07.2019 தேர்த்திருவிழாவும், 29ம் திகதி தீர்த்தமும், 31ம் திகதி மாம்பழத் திருவிழாவும், 01.08.2019 பூங்காவனமும் நடைபெற்று, 02.08.2019 வைரவர் மடையுடன் நிறைவு பெறுகிறது.**







ஓம் கணபதி துணை

# திருவருள்மிகு விம்பிள்டன் விநாயகப் பெருமான் திருக்கோவில்

# Shree Ghanapathy Temple

125-133 Effra Road, Wimbledon, London SW19 8PU

Tel: 0208 5427482, 0208 5424141. www. ghanapathy.co.uk, www. facebook.com/sgtempleuk

## விகாரி வருடம் மகோற்சவ பெருவிழா 2019




திருவருள்மிகு விநாயகப் பெருமானின் துணைகொண்டு, இவ்வாண்டு விளம்பி வருட மகா உற்சவ பெருவிழா 21.07.2019 ஞாயிறு கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமாகி, தொடர்ந்து பதினாறு நாட்கள் நடைபெறும்.


**04.08.2019 ஞாயிறு தேர்த்திருவிழாவும், 05.08.2019 திங்கள் பகல் தீர்த்தோற்சவ நிகழ்வும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.**

**04.08.2019 தேர்த்திருவிழா**

**8.30 A.M. to 1.30 P.M**




| தினசரி பூஜா காலம் காலை 9.00 மணி - காலை 11.15 மணி - மாலை 5.00 - மாலை 6.30 மணி | | | |
|---|---|---|---|
| 24.07.2019 | புதன்கிழமை | மாலை 7.00 மணி | பக்த முக்தி பாவனா உற்சவம் |
| 28.07.2019 | ஞாயிற்றுக்கிழமை | மாலை 6.00 மணி | மாம்பழத் திருவிழா |
| 02.08.2019 | வெள்ளிக்கிழமை | மாலை 5.00 மணி | வேட்டைத் திருவிழா |
| 03.08.2019 | சனிக்கிழமை | மாலை 6.00 மணி | சப்பறத் திருவிழா |
| 04.08.2019 | ஞாயிற்றுக்கிழமை | காலை 8.30 மணி | தேர்த் திருவிழா |
| 05.08.2019 | திங்கட்கிழமை | பகல் 11.00 மணி | தீர்த்த திருவிழா |
| 06.08.2019 | செவ்வாய்க்கிழமை | மாலை 7.00 மணி | பைரவர் மடை |
| 07.08.2019 | புதன் கிழமை | மாலை 6.30 மணி | பூங்காவனத் திருவிழா |




விநாயகப் பெருமான் அடியார்கள், மேற்படி கிரியா கால நிகழ்வுகளில், பண்ணிசை, பஜன், நாதஸ்வரக் கச்சேரிகளும் கூடிய விழாக்களில் பங்கு கொண்டு அருள் பெற வேண்டுகிறோம்.

குறிப்பு: அடியவர்கள் பூக்கள், பழங்கள் என்பனவற்றை ஆலயத்தில் சமர்ப்பிக்கலாம்.

“வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்”

டாக்டர். என்.ஜெகநாதன்



# தன்ம(ா)னம்

மனம் களங்கமற்றுவிட்டால் நிர்வாணம் புனிதமாகிறது. அது சாத்தியமா? மானம் காக்கவென ஆடை அவசியமே! தனது பெருமைக்காக ஆடம்பரமான ஆடை அணிவதில் தன்மானம் என்பதன் அர்த்தமே வேறு.

தன்னைப் பற்றிய இன்னொருவரது அபிப்பிராயம், தன்மதிப்பிலும் (தன்னைப் பற்றிய தனது அபிப்பிராயம்) தாழ்வாக அமையக்கூடாது என்ற ஏக்கமாக தன்மானம் படும்பாடு என இதைக் கூறலாம்.

சமூகத்தின் அங்கீகாரம் பற்றி நமக்கு அக்கறையில்லை என வாழ்பவர்களும் உண்டு. அடிமைகள் கூட்டத்தில் அல்லது சிறைக்கைதிகளில் இவ்வாறான தாழ்வு மனப்பான்மைக்கு இடமில்லை என்று சொல்வதற்கில்லை. அவர்களது நிலை சமூகத்தின் 'கண்களுக்கு' அப்பால் என்றாயினும், தமக்கிடையில் தன்மானம் தலையிடுவதை அவர்கள் தவிர்க்க இயலாது.

தனது எண்ணத்திற்கு இன்னொருவர் செவிசாய்க்கவில்லை என்றால் தனக்கு ஏன் அவமானம் எனவாக வேண்டும்? மற்றவரது மனதை நாம் கட்டுப்படுத்துவதான (*Controle Freak*) மனப்பான்மை தவிர்க்கப்பட வேண்டும். இதை மறந்து விடுவதால் தன்மானம் எழுகிறது.




மற்றவர் தன்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை; அது தனது தன்மானத்திற்கு இழுக்கு என மனம் நோவதில் அர்த்தமில்லை. தமது இஷ்டமின்றி எவரும் தன் மனதை புண்படுத்த முடியாது என்ற உண்மையை அவர்கள் அறியத் தவறுகிறார்கள்.

இன்னொருவரால் கஷ்ட நஷ்டம் ஏற்படின் மனம் நோகலாம். வெறும் அவதூறு வார்த்தைகளால் நமக்கு 'இழப்பு' என வருந்துவது மடமை. எமது எண்ணம் திருந்த வேண்டும். இல்லாவிடில் தூற்றியவரின் நோக்கத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பதாகி விடும்.

நமது நேர்மைக்கு சவாலாக மற்றவர் கேள்வியெழுப்புவது தன்மானத்திற்கு களங்கம் எனக் கருதலாம். தனக்கு நேர்மையாகப் படுவது மற்றவரது மனதில் நேர்மையற்றதாகப் படக்கூடியது. ஒவ்வொருவரது மனதும் வெவ்வேறானதாக யதார்த்தம் காண்பது தவிர்க்க இயலாதது. இங்கு கேள்விக்குரியது தன்மானமா? தன்மனமா?

ஏதோ விசேஷ காரியமாற்றுவதில் தனக்கு முதலிடம் வழங்கவில்லை, அல்லது வைபவத்தில் பங்குபெற அழைப்பு விடுக்கவில்லை என்பது நமக்கு அவமரியாதை எனத்துடிப்பவர்கள் தன்மானத்திற்கு தன் மனதில் முக்கியம் வழங்குகிறார்கள். முதல் மரியாதை தனக்கே உரித்தானது என எண்ணுபவன் தனக்கே அதிகாரம் என்ற முடிவுக்கும் வந்தவனாகிறான்.



மனநோயால் மிகையாகத் தாக்கப்பட்டவர்கள் மனதை 'இழந்து' விடுவதாக விபரிக்கப்படுகிறார்கள். தன்னைப் பற்றி எவ்வித அக்கறையுமில்லாமல் நடந்து கொள்வதால் தன்மானம் பற்றிய எண்ணமும் அவர்களுக்கு இல்லை என்றாகிறது. தன்மானம் தலைதூக்குவதில் தன் மனதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டியதே!

மனம் என்பதன் முக்கியத்துவம் மனித இனத்திற்கு மட்டுமே உள்ளதாக தெரிகிறது. விலங்கினம் உணவு, பாதுகாப்பு, கருக்கட்டல் தேவைகளுக்கென போட்டியிடுவதில் 'மனம்' கொண்டிருப்பதானாலும் ஒன்றையொன்று அடிமைப்படுத்துவதாக வாழ்வதில்லை.

விலங்கினங்களின் சமூக வாழ்வு பாதுகாப்பை முன்வைத்து அமைகிறது. மனிதனின் சமூக வாழ்வில் தனது பெருமையையும் அவசியமாக அவன் கருதுவதால் தன்மானம் என்பதையும் உள்ளடக்கி விடுகிறான். உயிருக்கும் மேலாக அதைக்கருதுவதால் தற்கொலைக்கும் தயாராகிறான்.

இன்னொருவனை அவமானப்படுத்துவதில் அவன் தனது பெருமையை உறுதிப்படுத்துவதாக செயல்படுகிறான் என்றும் சொல்லலாம். இந்த மான, அவமானம் என்பனவற்றை மனம் கொண்டிருப்பதேன்?

'நான்' என்பது ஆன்மாவைக்குறிப்பது. அது எமது முற்பிறப்பின் பாவ, புண்ணியத்திற்கேற்ப அமைவது என்பது சமய/ஆன்மீகவாதிகள் கருத்து. மனம் ஒரு தனிப்பட்ட அம்சம் எனவும் அவர்கள் கருதுவார்கள். உயிர் என்பதன் இயக்கச்சக்தியே ஆன்மா என்ற தொன்றுதொட்ட கருத்து இன்னும் நிலைத்திருப்பது, அது யதார்த்தமானது, அல்லது எமது அறியாமையால் என்றே கூறலாம்.

எது எவ்வாறிருப்பினும் மனம் என்று கூறப்படுவது நாம் எதையும் அறிந்து கொள்வதற்கான ஆற்றலை (அறிவுணர்வு) உள்ளடக்குவதே. அறிவு சூனியமான காலகட்டமான குழந்தைப் பருவத்தில் அறிவுணர்வு சாத்தியமாகாது அல்லது சொற்பமானது. புலன்களினூடாகப் பெறும் சமிக்ஞைகள் மனதை சென்றடைவதை உள்ளுணர்வு (*Perception*) என்றும் கூறுவார்கள். இதைச் செப்பனிடுவதாக (*Process*) அறிவுணர்வு அமைகிறது. ஏற்கனவே உள்ள அறிவு, அனுபவங்களில் அது தங்கிவிடுவதாக உள்ளது.

எவ்வளவுதான் 'படித்துக் கிழித்து' விட்டாலும் ஏற்கனவே எமக்குள்ள அறிவு நிறைவானது எனக்கூற முடியுமா? அறியாமை அளப்பரியது. நாம் அறிந்துவிட்டதாக மனதில் படுவது (அறிவுணர்வு) யதார்த்தமற்றதாக அமையலாம். அதைக் கருத்தில் கொள்ளாவிடில் மாயைக்குள்ளாகலாம். மாயை இருள் விலக தன்மானம் என்ற போர்வை அகலவேண்டும்.

'மனக்கண்' பெறக்கூடிய அறிவுணர்வை அது மறைத்துவிடுமேயானால் யதார்த்தம் காண்பதில் தவறிவிடுவோம். நாட்டியம் ஆடத் தெரியாதவன் மேடையை குற்றம் சாட்டுவதான முதுமொழி இதை விளக்குவதே.

எந்த எண்ணமும் அனுமானமாக உதிப்பதே. அது தீர்மானமாகும்போது தன்னையறியாது தன்மானம் குறுக்கிடும். நடுநிலை தவற, தனக்கே சாதகமாக தீர்மானம் அமைய மனம் முயல்கிறது. தனது கருத்தை மற்றவர் எதிர்த்தால் தனது பெருமைக்கு சவால் என மனக்கொதிப்பு அடைவது விவேகத்திற்கு ஆனதல்ல. நீதி தவறாதிருக்க பாரபட்சம் காட்டாத நடுநிலை, செங்கோல் ஆட்சிக்குரியது.

கருத்து ஒருமித்து விடாதபோது நிதானமாக சிந்திக்க வேண்டியது அவசியமே. அறிவுணர்வை பரிசீலித்தால் அதை சீர்திருத்த முடியுமாகலாம். உள்ளுணர்வுக்கான எமது நோக்கம் பலகோணங்களில் அமைவதாக வேண்டும். உதாரணமாக, பானை பாதி நிரம்பியுள்ளது; மறுபாதி வீண் என வருந்துவதும், அல்லது பாதி இடம் காலி, நிரப்பி விட்டால் போச்சு எனவும் ஆகலாம்.

அமைதியற்ற மனம் குறை காண்பதாயும், அமைதி கண்ட மனம் எதையும் பெரிது பண்ணாமல் விடுவதும் இயல்பே. மன அமைதிக்கான பாதை தனக்குள்ளாக அமைக்கப்பட வேண்டியது. இன்னொருவரது பாதையை பின்பற்றுவதானதில்லை. இத்தன்மார்க்கம் சன்மார்க்கமாக தன்மானம் ஒரு தடையே.

ஆங்கிலத்தில் '*Beuty is Skin Deep*' என்பதை சருமத்தின் பருமன் எமது புறஅழகுக்கானது எனலாம். மூளையின் வெளிப்புற கருமை வலயம் (*Grey-zone*) என்பதன் தடிப்பு / அமைப்பில் தங்கியுள்ளதாக எமது பெருமை-உள்ளுணர்வு, செயலாற்றல்கள் அமைகின்றன. முதுமையில் இவை அடையும் சுருக்கம், அழகையும் பெருமையையும் நிலைக்க விடுவதில்லை. உடல் கூனி, குறுகி, மலசல கட்டுப்பாடு அற்றுவிடின் தன்மானம் அம்போதான்!

இளமைத்துடிப்பிலுள்ள மனம் இவை அறியாதது. அதில் தன்மானம் மேலோங்குவது ஆணவத்தை எடுத்துக்காட்டுவதே. அதை அடக்கவென மனச்சாட்சியாக எழுவதை இறைவன் ஆசியாக கருதுவது தகுந்ததே. ஆணவத்தை எதிர்க்கவல்ல மன இயல்பை (*Super-Ego*) நாம் அடையலாம் என உளவியல் அறிவு கூறுகிறது.

தியானம், பக்திப்பரவசம் மூலம் தன்னை மறக்கலாம்; தன்மானமும் மறக்கலாம். அவை காலவரையறையானவை. மனம் இயங்கும் வரை மனச்சாட்சி நிலைக்க முடியும். தன்மானத்தை உதறி மற்றவரது நலன் கருதுவதாக மனச்சாட்சி இயங்க வேண்டும். அதுவே நிலையான மன அமைதிக்கு வழி. மனதில் பற்றற்று விட வேண்டும் எனும்போது, தன்மானம் விதிவிலக்கா என்ன?

நினைவுணர்வு உள்ளவரை தன்மானம் காக்க எத்தனிப்பதாகவே மனம் இயங்குகிறது. இதில் மனம் மாயைக்குள்ளாவதை அறியாதவரை அறிவொளியடைய இயலாது. அதை, இதை முற்றாக அறிவிட்டோம் என்ற இறுமாப்பு தன்மானத்திற்கு ஒரு காப்பு என்றே கூறலாம்.

'முக்திநிலை, ஆணவம் அற்றுவிட்ட நிர்வாணம் என்பதுமாகும்'. ●

# உயிரினம்

கடந்த இருபது வருடங்களாக இலண்டனில் வசிக்கும் டாக்டர் ரவியின் மகள் அபிராமியின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று. நிகழ்ச்சிகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இரு வெவ்வேறு அறிவிப்பாளர்கள், பிரதம அறிவிப்பாளர் எவ்வளவு தான் நகைச்சுவை ததும்ப நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியபோதும்- சபையில் இருந்த பெரும்பாலோர் அதை ரசித்ததாகத் தெரியவில்லை- அவர்கள் சிரிப்பதாக இல்லை. இடைவேளையின் போது பிரதம அறிவிப்பாளர் இது பற்றி தன் சக அறிவிப்பாளர் இது பற்றி தன் சக அறிவிப்பாளரிடம் கேட்டார்:

இது ஒரு உன்னதமான-அருமையான மாலைப்பொழுது. ஒரு கலை நிகழ்ச்சியைப் பார்த்து ரசிக்கவே இங்கு எல்லோரும் கூடியிருக்கிறார்கள். நாளை விடுமுறை வேறு-வேலை கூட கிடையாது. அப்புறம் எதற்காக சபையில் பெரும்பாலோர் எதையோ பறிகொடுத்தவர்கள் போல- சிரிக்கத் தெரியாத மனிதர்களாக-முகத்தில் சோகம் ததும்ப- ஏதோ கடமைக்கு வந்தது போல தங்கள் இருக்கையில் அமர்ந்திருக்கிறார்கள்?

அறிவிப்பாளர்கள் இருவரும் மிக நெருங்கிய நண்பர்கள். நண்பனின் கேள்விக்கு துணை அறிவிப்பாளரின் பதில்:

உனக்குத்தான் நம்மவர்களைப் பற்றி நன்றாகத் தெரியுமே! சந்தோஷம் என்றாலே என்ன வென்று தெரியாத- சந்தோஷமாகவே இருக்கத் தெரியாத ஒரு வைக அபூர்வ உயிரினங்கள். நாம் எங்கு இருக்கிறோம்- எதற்காக இங்கு வந்திருக்கிறோம்- என்ற சிந்தனையே இங்கு அமர்ந்திருக்கும் பெரும்பாலான உயிரினங்களுக்குத் தெரியாது. எதையோ தேடி- எதற்கானவோ இங்கு வந்திருக்கும் இவற்றின் உடல் மட்டும் தான் இங்கு இருக்கிறது. அவற்றின் மனது நிறைய எத்தனையோ கனவுகள்-திட்டங்கள்.

இது என்ன ஒரு கண்டறியாத அரங்கேற்றம்! நான் போன வருடம் எனது மகளுக்கு வைத்த அரங்கேற்றத்துடன் ஒப்பிடும் போது இது அரங்கேற்றமே இல்லை. எனது மகளின் ஆட்டம் என்ன- இவளின் டப்பா கூத்து என்ன? அப்புறம் எதற்கான தான் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்? இது பிராணி நம்பர் ஒன்றின் சிந்தனை!



இலண்டனிலுள்ள ஒரு பிரபல பல்கலைக்கழகத்தில் தனது மகன் படித்துக் கொண்டிருக்கிறான் என்று எனது நண்பன் பெரிதாக புழுகித் திரிகிறான். இந்த வருடம் சோதனை எழுதும் எனது மகனையும் எப்படியும் நண்பனின் மகன் செல்லும் அதே பல்கலைக்கழகத்தில் சேர்த்து அவன் வாயை மூட வேண்டும். இது பிராணி நம்பர் இரண்டின் சிந்தனை!

என்னுடன் படித்த- என்னுடன் இலண்டனுக்கு வந்த நண்பர்கள் எல்லோருமே- என்னைத் தவிர- இப்பொழுது இலண்டனில் இரண்டு வீடு வைத்திருக்கிறார்கள். எப்படியாவது நானும் ஒரு வீட்டை இந்த வருட முடிவுக்குள் வாங்கிவிட வேண்டும். இது பிராணி நம்பர் மூன்றின் சிந்தனை!

பிரச்சனையை தாங்களாவே உருவாக்கி- பிரச்சனைகளே வாழ்க்கை என்று வாழும் இந்த உயிரினங்கள் எப்படி சிரிக்கும்?



அன்பான
வல்வெட்டி உறவுகளுக்கு,

**கோடை கால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்.**

ஒவ்வொரு உறவுகளும் உங்கள் குடும்பத்துடன் இந்த நாளை இனிய நாளாக மாற்ற, விரைந்து வாருங்கள்.

காலம்: 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10.30 மணியிலிருந்து மாலை 7.30 மணி வரை

மைதானம்: Ashton Palying Fields, 598 Chigwell Road, Woodford Bridge, Essex, IG8 8AA


கொத்துரொட்டி, கூள், அப்பம், போன்ற தாயக உணவுகளோடு குளிர்பானம், தண்ணீர் போன்றவை உட்பட வல்வெட்டி உறவுகளுக்கு நுழைவுக்கட்டணமும் இலவசம்.

•

சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் பலவிதமான போட்டிகளும், பரிசில்களும் வழங்கப்படுமென்பதை அன்போடு அறியத்தருகின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு, S.SABESAN: 07930469798, K.BASKARALINGAM: 07903420426
S.JEYANTHAN: 07950603396, P.THAVARAJAH: 07414854730

**வல்வெட்டி நலன்புரிச் சங்கம்-லண்டன்.**



# நிஜம்

ஓட்டப் பந்தயத்திற்கெனவே நிபுணர்களால் தெரியப்பட்டு-கவனமாக வளர்க்கப்பட்டு-விஷேடமான பயிற்சி அளிக்கப்பட்ட நாய் ஜிம்மி. நீண்ட கால்கள்- மெல்லிய உடல்- நீண்ட முகம்- கரிய நிறம். வில்லிலிருந்து அம்பு புறப்பட்டது போல ஜிம்மி பந்தயங்களில் ஓடும் காட்சியை காணக் கண் கோடி போதாது.

கடந்த ஐந்து வருடங்களில் எந்த ஓட்டப்பந்தயத்திலும் ஜிம்மி தோற்றதில்லை. எப்பொழுதுமே அதற்குத்தான் முதலிடம்.

ஜிம்மிக்கு நீண்ட நாட்களாக மனதில் ஒரு பெரும் குறை. எவ்வளவு தான் அது வேகமாக ஓடியும் தனக்கு முன்னால் ஓடும் அந்த முயலை தன்னால் பிடிக்க முடியவில்லையே என்பதே அந்தக் குறை. எப்படியாவது ஒரு நாள் அந்த முயலைப் பிடித்தே விடுவது என்ற வைராக்கியத்துடன் நாளுக்கு நாள் தன் வேகத்தை அதிகப்படுத்தியது ஜிம்மி.

ஒரு நாள்- எதிர்பாராத விதமாக பந்தய மைதானத்தில் ஏற்பட்ட ஒரு அசம்பாவிதத்தினால் ஜிம்மி அந்த முயலைப் பிடித்தே விட்டது.

அந்த நிமிடமே ஜிம்மிக்கு எல்லா உண்மைகளும் விளங்கி விட்டன.

தான் இவ்வளவு நாட்களாக துரத்தியது ஒரு வெறும் பொம்மை என்றும்- அதை ஒரு போதும் தன்னால் பிடித்திருக்க முடியாது என்றும்- அப்படித்தான் பிடித்தாலும் அதனால் ஒன்றுமே ஆகியிருக்கப் போவதில்லை என்றும் ஜிம்மிக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

அன்றிலிருந்து ஜிம்மி பந்தயங்களில் ஓட முயற்சிப்பதேயில்லை. எப்பொழுதும் கடைசி இடம் அதற்குத்தான். சில சமயங்களில் ஆரம்பத்திலேயே மைதானத்தில் படுத்துவிடும்.

ஜிம்மியை பரிசோதித்த தலைசிறந்த மிருக வைத்தியர் குணப்படுத்த முடியாத ஒரு அபூர்வ வியாதி ஜிம்மியை பாதித்திருப்பதாக கூறினார்.

இப்பொழுது ஜிம்மியை யாரும் கவனிப்பதில்லை. அதற்கு வேளாவேளைக்கு உணவு கிடைப்பதில்லை. சில நாட்கள் அது வீதி வீதியாக அலைந்தது. சிறுவர்களின் தொல்லை தாங்காமல் கடந்த சில நாட்களாக ஊருக்கு வெளியேயுள்ள ஒரு சத்திரத்தில் தஞ்சமடைந்திருக்கிறது.

நிழலை நிஜமென்று துரத்தும் மனிதர்கள் வாழும் உலகில் உண்மையை உணர்ந்தவர்களுக்கு சத்திரமே தஞ்சம்.

ஜிம்மி கூட விதிவிலக்கல்ல.



## விசாகஹரியின் முருக வைபவம்

# சொற்பொழிவா? கச்சேரியா?

## மனதை நிறைத்த நிகழ்வு

ஹரிகதை, காலட்சேபம், கதாப்பிரசங்கம் எனப் பல பெயர் கொண்டது இசையுடன் கூடிய சொற்பொழிவு. இந்தத் துறை 19ஆம் நூற்றாண்டளவில் உதயமானது என்பர். இந்தக் கலையில் கைதேர்ந்தவர்கள் மிகச்சிலர். அவர்களுள் ஒருவர் திருமதி விசாகா ஹரி அவர்கள்.





சென்ற மே மாதம் (2019) இருபத்தியேழாம் திகதி, ஹைகேட் ஹில் முருகன்கோயில் மண்டபத்தில் “முருக வைபவம்” என்ற தலைப்பில் திருமதி விசாகா ஹரி அவர்கள் ஓர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். யாழ்ப்பாணத்தின் வடபால் உள்ள கீரிமலை நகுலேசுவர சுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக இந்நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. மண்டபம் நிறைந்த மக்கள் இரண்டுமணி நேரம் தம்மை மறந்து ஆன்மிகத்தில் ஈடுபட இந்நிகழ்ச்சி உதவியது.

‘அருவமும் உருவுமாகி’ என்ற கந்தபுராணப் பாடலைச் சிந்துபைரவி இராகத்தில் பாடித் தொடர்ந்து காந்தமாrம் கதிர்காமம் தன்னில் என்ற பாடலைப்பாடி நிகழ்ச்சியை ஆரம்பித்தார் திருமதி விசாகா அவர்கள். பல பாடல்கள், பல குறிப்புக்கள், பல சமயத் தத்துவங்கள் என்று அவரின் உரை முழுவதும், பாயசத்தில் இருக்கும் முந்திரிப் பருப்புப்போல, சுவையாக இருந்தன.

முருகனின் தோற்றம், தாரகாசுரனை வதம் செய்தமை, பிரம்மாவைச் சிறையிலிட்டமை, மாம்பழம் கிடைக்காமையால் கோபமுற்றுப் பழனி சென்றமை, சூரனை ஆட்கொண்டமை, வள்ளி திருமணம் போன்ற பல உப தலைப்புக்களில் உபந்யாசம் நடந்தது.

கதையின் போக்கில் பொருத்தமான பாடல்களைக் கொண்டுவந்து சேர்த்த உத்தியும், பாபநாசம் சிவன், சிதம்பர பாரதி, முத்துசுவாமி தீட்சிதர் என்று பல வாக்கேயகாரர்களின் பாடல்களைப் பாடிய விதமும், பாடல்களிடையே கற்பனாஸ்வரங்களைப் பாடி ஒரு கச்சேரிபோலக் கொண்டுசென்ற பாணியும் சோர்வில்லாது முழு நிகழ்வையும் பார்க்க, கேட்க மிகவும் உதவியது.



ஸ்ரீவல்லி தேவசேனாபதே என்ற பாபநாசம் சிவனின் நடபைரவி இராகப் பாடல் பாடியபோது ஒரு சிறு தனியாவர்த்தனத்துக்கும் இடம் கிடைத்தது. சொற்பொழிவா, கச்சேரியா என்று பிரித்தறிய முடியாதவாறு நிகழ்ச்சி அமைந்தது மிகச்சிறப்பு.

பக்கவாத்தியமாக, Dr. யோத்சனா ஸ்ரீகாந்த் வயலின், Dr. அபிராம் மிருதங்கம், Dr. புஜங்கன் கஞ்சிரா, திரு சிதம்பரநாதன் மோர்சிங் வாசித்தனர். மிக அநுசரணையாக பக்கவாத்தியம் அமைந்தது நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பூட்டியது.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் Dr. நவரத்தினம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து கோயில் ஆதீனகர்த்தர் பிரம்மஸ்ரீ நகுலேசுவரக் குருக்களின் ஆசியுரை தொலைபேசி மூலம் வழங்கப்பட்டது. Dr.சிவகுமார் அவர்கள் கலைஞர்களை அறிமுகம் செய்துவைத்தார். திரு தம்பு அவர்கள் நிறைவில் நன்றியுரை நவின்றார்.

அன்று வந்திருந்த அனைவருக்கும் அந்த மாலைப் பொழுது இனியதாக, மன நிறைவு கொடுப்பதாக அமைந்திருந்தது. அது ஸ்ரீ நகுலாம்பிகை அம்பாள் உடனுறை ஸ்ரீ நகுலேசுவரப் பெருமானின் திருவருளே.

**படங்கள்: லக்ஷிபாபா**



## கனடா தமிழர் தகவல் ஆசிரியருக்கு தமிழ் இலக்கியத் தோட்ட சிறப்பு விருது



கனடாவைத் தளமாகக் கொண்டு சர்வதேச ரீதியாக இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் பதினெட்டாவது ஆண்டு விருது விழா கடந்த மாதம் ஒன்பதாம் திகதி ரொறன்ரோ நகரில் இடம்பெற்றது. அமெரிக்காவின் மருத்துவப் பேராசிரியர் ஜானகி ராமன் மற்றும் நியுயோர்க் கொலம்பியா பல்கலைக்கழக தமிழ் மொழி விரிவுரையாளர் ரைலர் றிச்சார்ட் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக இவ்விழாவில் பங்குபற்றினர். இலக்கியத் தோட்ட காப்பாளர் பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன், தலைவர் சட்டவாளர் மனுவல் ஜேசுதாசன், செயலாளர் அ. முத்துலிங்கம் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழிலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் பன்முக ஆளுமையுடன் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஆற்றிவரும் பணிகளுக்காக தமிழ் இலக்கிய சாதனை சிறப்பு விருதுடன் ஆயிரம் கனடிய டாலர்கள் பரிசுத்தொகை கனடா தமிழர் தகவல் முதன்மை ஆசிரியரான திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருது விழா தொடர்பாக வெளியிடப்பட்ட சிறப்பு இதழில் இவ்விருது தொடர்பாக திருச்செல்வம் அவர்கள் பின்வருமாறு அறிமுகம் செய்யப்பட்டிருந்தார்.

’எஸ்தி என்ற பெயரில் ஊடக - இலக்கியப் பரப்பில் நன்கு அறியப்பட்டவரான திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாணவப் பராயத்திலேயே எழுத்துலகில் புகுந்த இவர், பத்திரிகைத்துறையில் பாதம் பதித்து முழுநேர ஊடகவியலாளரானார். யாழ்ப்பாணம் ஈழநாடு, கொழும்பு தினகரன் பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றிய பின்னர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில செய்திப் பிரிவில் பணிபுரிந்தார். தினகரனில் 14 வருடங்களுக்கு மேலாக இவர் எழுதிவந்த ஷஅறுவடை| என்ற இலக்கியப் பத்தி மிகப்பிரபலமானது.



1983க்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு, முரசொலி ஆகிய இரண்டு தினசரிப் பத்திரிகைகளை ஆரம்பித்து அவற்றின் நிறுவன ஆசிரியராக பணியாற்றிய இவருக்கு மட்டுமே, இலங்கையில் இரண்டு தினசரிகளை ஆரம்பித்து அதன் ஆசிரியராக விளங்கிய பெருமையுண்டு.

கனடாவில் 1991ஆம் ஆண்டு ஷதமிழர் தகவல்| சஞ்சிகை வெளியிட ஆரம்பித்து, இப்போது 29வது ஆண்டாக மாதா மாதம் வெளியிட்டு வருவது தனிச்சாதனை. இதன் ஆசிரியராக விளங்கி வருடந்தோறும் வெளியிட்டு வரும் ஆண்டு மலர் தமிழர் சமூக வரலாற்று ஆவணமாகத் திகழ்ந்து வருகிறது. பல புனைபெயர்களில் இலக்கிய விமர்சனம், அரசியல் ஆய்வு என்பவற்றை எழுதி வருவதோடு சமூக செயற்பாட்டாளராகவும் அரசியல் விமர்சகராகவும் பணியாற்றி வருகிறார். கனடியத் தமிழ் சமூகத்தில் கடந்து 28 ஆண்டுகளாகத் தொடர்ந்து தகுந்த ஆளுமைகளுக்கு விருது வழங்குவதை ஆரம்பித்து செயற்படுத்தி வருகிறார். ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த இவர் ஒன்ராறியோ மாகாண அரசின் முதலாவது குடிவரவாளர் சாம்பியன் விருது, கனடிய பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான ஜூன் கால்வூட் ஞாபகார்த்த பிரஜாவுரிமை அமைச்சின் அதியுயர் சேவை விருது ஆகியவற்றைப் பெற்றவர்" என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விழாவில் தமிழகத்தின் பிரபல எழுத்தாளரான இமையனுக்கு இயல் விருது வழங்கப்பட்டது. மேலும் எண்மர் வெவ்வேறு இலக்கியத் துறைகளுக்கு விருதுகள் பெற்றனர்.



உ

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# SAIVA MUNNETTA SANGAM

2 Salisbury Road, Manor Park E12 6AB Tel : 020 8514 4732

www.saivamunnettasangam Email: smsukinfo@gmail.com Reg.Charity No: 292085

## அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலய

## ஆனி உத்தர திருமஞ்சன மஹோற்சவ அழைப்பிதழ்

## 28.06.2019 - 10.07.2019

அன்புடைய பக்தப்பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம்.

**அனைத்து உலகிற்கும் தாயும் தந்தையுமாக விளங்கும் கருணாமூர்த்தியான அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானுடைய திருவருள் துணையுடனும், அடியார்களின் பக்திடனும், நிகழும் மங்களகரமான விகாரி வருடம் ஆனி மாதம் 15ம் திகதி (29-06-2019) சனிக்கிழமை, துவாதசி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சித்த, அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 11 மணிக்கு மேல் 12 மணிக்குள் கன்னிகா லக்கினத்தில் துவஜாரோஹணை (கொடியேற்றம்) நிகழ்வும் 07-07-2019 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 08-07-2019 திங்கட்கிழமை ஆனி உத்தர திருமஞ்சன திருவிழாவும் தீர்த்தோற்சவமும் நிகழ திருவருள் கூடியுள்ளது.**

**அடியார்கள் ஆசாரசீலர்களாய் ஆலயத்திற்கு வருகை தந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவருள் பெற்று பேரின்பப் பெருவாழ்வு பெற அன்புடன் அழைக்கின்றோம்.**

## Aani Uthara Brahmotsavam 2019
## Sri Sithambareswarar Temple

Annual Brahmotsavam is the most important festival among all the festivals in a temple. Sri Sithambareswarar Temple Brahmostsavam will commence with the flag hoisting ceremony on 29th June 2019 starting from 11.00 am. During the festival period ceremonies will be held in the morning and evening. The highlight of the festival is the drawing of the Chariot (Theer) on 07th July 2019.

The SMS (UK) Invites you all to attend the temple festival, participate in the ceremonies, enjoy the proceedings and obtain the blessing of Lord Shiva.

We kindly request devotees to lookout the car parking restrictings during the festival period.





# நிஜங்கள்

அவள் கண்ணாடியின் முன் நின்று தன்னையே திரும்பத் திரும்ப பார்த்தாள். மனதில் ஏதோ ஒருவித நிலைக்க முடியாத அச்சம். நான் இவ்வளவு அழகாக இருக்கிறேனோ.... ஆனால் பலரால் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே.

தலைக் கூந்தலில் மல்லிகைப் பூச்சரத்தை வைத்து இரண்டு கெயர் பின்களை எடுத்து கொழுவி சரிசெய்துகொண்டாள். மீண்டும் தலையை ஒரு பக்கமாகத் திருப்பி கூந்தலில் படிந்திருந்த மல்லிகையின் அழகைப் பார்த்தாள். அவளது அழகுக்கும் அளவேயில்லை. சிவந்த உதடுகளும் மெல்லிய இடையும் மேலும் அவளுக்கு மெருகூட்டிக்கொண்டிருந்தன.

வாழ்க்கை என்ற நீண்ட தொடரான பாதையில் இடையிடையே எத்தனை மாற்றங்கள் வந்து போகும். சௌந்தர்யா மாத்திரம் இதற்கு விதிவிலக்கா?

தந்தைக்கு ஒரு மகளாக அண்ணனுக்கு ஒரு தங்கையாக தம்பிக்கு ஒரு அக்காவாக வாழ்ந்த நாட்கள் படம் போல் மனக்கண்முன் வந்து நின்றது. ஆனால் சிறுவயதில் உடலில் ஏற்பட்ட பருவமாற்றங்கள் எல்லாவற்றையும் தலைகீழாக புரட்டிப்போட்டுவிட்டது.

இப்பொழுது சௌந்தர்யாவுக்கு முப்பத்துஎட்டு வயதுதான். இளமையின் பூரிக்கும் அழகாக கட்டுடலும் இன்னமும் பல ஆண்களின் கவனத்தை ஈர்த்தது. அதற்குப் பல காரணங்களும் உண்டு.

“சுரபி சௌந்தர்யாவை நோக்கி ஓடி வந்தாள். அம்மா நீ ரொம்பவும் அழகாக இருக்கிறாய். என்னைவிட அழகாக இருக்கிறாய். இண்டைக்கு எல்லாரும் உன்னைத்தான் பார்க்கப் போகினம்.”

சௌந்தர்யா ஒன்றும் சொல்லாமல் மௌனமாக அவளையே பார்த்தாள். அவள் மனது மௌனமாகவே பலவற்றை நினைத்துக்கொண்டது.

எனக்கும் தானே என்ர அப்பா, அம்மா, அண்ணா எல்லோருமாக பலரையும் கூப்பிட்டு இப்படியொரு பூப்புனித நீராட்டுவிழாவை செய்து முடித்தார்கள். அவையெல்லாம் முடிந்து இருபத்திஆறு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இருந்தும் பழைய நினைவுகள் தலையெடுத்து சௌந்தர்யாவை இடையிடையே தடுமாற வைத்துக்கொண்டிருந்தன.

சௌந்தர்யா ஒரு படித்தவள். அதுவும் சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்றவள். அவள் கனடாவிற்கு அகதியாக வந்து பன்னிரெண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

அவள் கனடாவிற்கு வந்த நாட்களில் எவ்வளவு கஸ்டப்பட்டாள் என்பது அவளுக்கு மாத்திரமே தெரியும். உறையும் பனியில் ரெஸ்ட்ஆரண்டில் வேலை செய்து நடுஇரவு தாண்டி வீடு வந்து தான் உழைத்த உழைப்பை படிப்பிற்காக செலவழித்து இன்று பலராலும் போற்றத்தக்க ஒரு பிரபல சட்டத்தரணிதான் சௌந்தர்யா.

“அம்மா கீழ அழகாக டெக்ரேட் பண்ணி இருக்கிறாங்க. ஒருக்கா கீழ வந்து பாரேன்” சுரபி அடம்பிடித்தாள்.

“கொஞ்சம் பொறு சுரபி நான் முதலில என்னை டெக்கரேட் பண்ணிக்கொண்டு வாரன்” சௌந்தர்யாவிடமிருந்து பதில் வந்தது.

“என்ர பிரண்ட்ஸ் வீட்டுக்கு போனாலும் இப்படித்தான் டெக்ரேஸன் செய்திருப்பாங்க. ஆர்த்தி, ஆரண்யா, நிருபா, டிலக்சி இவங்கிட விழாவுக்கு எல்லாம் இப்படித்தான் டெகரேசன் செய்திருந்தாங்க. சந்தோசத்தில் துள்ளிக் குதித்தாள் சுரபி.

இப்ப இதெல்லாம் ஒரு ஸ்டேட்டஸ் சிம்பலாகப் போச்சு. ஒரு வீட்டில விழா நடந்து அந்த வீட்டுக்கு சகமாணவி போய் தனது விழாவும் அப்படி நடக்காவிட்டால் தாழ்வு மனப்பாண்மை வருமளவுக்கு எல்லாமே கனடாவில் மாறிப் போயிருந்தது.

“அம்மா இப்ப கீழ வறப் போறியா இல்லையா” சௌந்தர்யாவின் கையைப் பிடித்து இழுத்தாள் சுரபி.

“கொஞ்சம் பொறு பிள்ள. அவசரப்படாதை. கீழ வந்தவங்களோட நீ போய் கதை. உன்ர கிளாஸ் மேட்ஸ்தானே.”

“அம்மா அவங்கட அம்மாமாரும் வந்திருக்கிறாங்கள்” சுரபி சிணுங்கினாள்.

சுரபி சௌந்தர்யாவின் கையைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கிவர ஐயரும் பூசைக்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தார்.

சுரபி தாயை இழுத்து வந்து ஒவ்வொரு நண்பிகளுக்கும் அவர்களின் தாய்மாருக்கும் அறிமுகம் செய்துவைத்துக் கொண்டிருந்தாள்.

சௌந்தர்யாவும் ஹலோ, வெல்கம் என்று சொல்லியபடியே ஒவ்வொருவரையும் கட்டியணைத்து முத்தம் கொடுத்தாள்.

“சுரபி இந்த விழாவிற்கு சுப்பர் டெக்கரேசன்” நண்பியொருத்தி சுரபிக்கு பாராட்டு தெரிவித்தாள்.

எங்க உங்கட அதர் வாப்பை (கணவர்) காணேல்ல. சுரபியின் இன்னொரு நண்பியின் தாய் கேட்டாள்.



“அவர் என்னை விட்டுப்பிரிந்து எத்தனையோ வருசங்கள் ஆச்சு” ஒருவித பதற்றத்துடன் சௌந்தர்யாவின் பதில் வந்தது.

“எல்லாம் ஆயத்தம் அம்மா. நல்ல நேரம் முடியிறதுக்கு முதல் துடக்கு கழிக்க வேணும். நீங்களும் சுரபிக் குட்டியும் ஆயத்தமோ” வந்திருந்த ஐயர் சௌந்தர்யாவைப் பார்த்துக் கேட்டார்.

சுரபி தாயிற்கு பக்கத்தில இருக்க, சௌந்தர்யாவின் குங்குமப்பொட்டு அவள் முகத்தின் அழகை மேலும் மெருகூட்ட சுரபியின் நண்பிகளும் தாய்மார்களும் சுற்றியிருக்க ஐயர் தனது வேலையை ஆரம்பித்தார்.

மந்திரங்கள் ஓதி சுரபியின் பூப்புனித நீராட்டுவிழா சிறப்பாக நடந்து முடிந்தது. அந்த விழாவிற்கு சுரபியின் நண்பர்களும் தாய்மார்களும் வந்திருந்தார்களே தவிர சௌந்தர்யாவின் உறவினரோ எவரும் வரவில்லை. அதற்கும் பல காரணங்கள் இருக்கலாம்.

பூப்புனித நீராட்டுவிழா முடிந்து எல்லோரும் உணவருந்திவிட்டு ஒவ்வொருவராக பறப்பட்டார்கள். விடைபெற்றுச் செல்லும் ஒவ்வொருவருக்கும் சௌந்தர்யாவும் சுரபியும் நன்றி சொல்லி அனுப்பிவைத்தார்கள்.

“எல்லோரும் போனபின்பு சுரபி சௌந்தர்யாவின் கையைப் பிடித்தபடி “அம்மா வந்து இவங்களைத்தவிர எங்களுக்கென்று சொந்தக்காரர் எவரும் இல்லையா” சோகம் சேர்ந்த களைப்புடன் சௌந்தர்யாவிடம் கேட்டாள் சுரபி.

“எல்லோரும் எங்கட தாயகத்திலதான்” மெல்லியதாய் கண்கள் சிவக்க பதில் சொன்னாள் சௌந்தர்யா.”

“நீங்கள்தானே பெரிய சட்டத்தரணியாச்சே. ஸ்பொன்சர் பண்ணி கூப்பிட்டிருக்கலாமே”

சௌந்தர்யாவால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. சுரபியின் தலையை வருடிக்கொடுத்த வண்ணம் “எல்லாம் நல்லபடியாகத்தானே முடிஞ்சுது” என்று சொன்னாள். ஆனால் அவள் மனதில் இருந்த வலியை சுரபியின் முன்னால் அவளுக்கு வெளிக்காட்ட முடியவில்லை.

“நான் போய் கொஞ்ச நேரம் படுக்கப்போறன். நீ பிள்ள உன்ர நண்பிகள் தந்த பிரசண்டுகளை ஒவ்வொன்றாக உடைத்துப் பார்.

சொல்லிவிட்டு மேல்மாடிக்குச் சென்று தனது அறையில் உடைகளை மாற்றிவிட்டு மென்மையான அந்தக் கட்டிலில் சாய்ந்தாள் சௌந்தர்யா.

தலையணையை இரண்டாக மடித்து முகத்தை அதில் புதைத்து வைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

சுரபிக்கு உண்மையைக் சொல்லுவதா அல்லது அப்படியே மூடி மறைத்துவிடுவதா என்று தெரியாதவளாய் குழம்பி போயிருந்தாள் சௌந்தர்யா.

சௌந்தர்யா கனடாவுக்கு வந்துவிட்டு திரும்பி இலங்கைக்கு சென்றபோது யாரோ ஒரு பெண் விட்ட பிழையால் பிறந்தவள்தான் சுரபி. அவளை முறையாக தத்தெடுத்து கனடாவிற்கு கொண்டு வந்து ஒரு தாயாக இதுவரை காலமும் ஒரு குறையும் வைக்காமல் வளர்த்து வந்திருக்கிறாள் சௌந்தர்யா.

இனி எப்படி அவளிடம் போய் நீ என்ர சொந்தப்பிள்ளை இல்ல. தத்தெடுக்கப்பட்ட பிள்ளை என்று அவளிடம் சொல்வது.

சுரபி அப்பா எங்க என்று கேட்ட போதெல்லாம் “அப்பா எப்பவோ என்னைவிட்டு பிரிந்து போய்விட்டார். அதுவும் நீ பிறந்த உடனேயே” என்று சௌந்தர்யா சுரபிக்கு சொன்னதெல்லாம் உண்மையல்ல.

தலையணையை திருப்பி வைத்துக்கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்தாள் சௌந்தர்யா. புழைய நினைவுகள் மெல்ல சுழலத் தொடங்கின.

தனக்கும் பூப்புனித நீராட்டுவிழா நடந்து முடிந்து கொஞ்ச நாட்களிலேயே உடலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அவள் உணரத்தொடங்கினாள். பெண்ணின் உடலைக் கொடுத்து அதில் ஆணின் உணர்வுகளைப் புகுத்தி இறைவன் விளையாடும் விளையாட்டை விதி என்று சொல்வதா?

ஆணின் உணர்வுகள் கூடக்கூட குரலிலும் சிறிதாக மாற்றங்கள் தெரியத் தொடங்கின. ஆனால் அவற்றையெல்லாம் காட்டிக் கொள்ளாதவளாய் தான் திருமணம் முடித்தாலும் எப்படி ஆண்மையின் தன்மைகளைக்கொண்ட தான் எப்படி இன்னொரு ஆண்மகனை திருமணம் முடித்து வாழ்வது என்று நினைத்து விரும்பாதவளாய் கனடா வந்து சேர்ந்தாள்.

அப்பா தன்னையும் சுரபியையும் விட்டுப் பிரிந்து சென்றது என்பதெல்லாம் நிஜமல்ல. பொய் என்றும் சொல்லிவிட முடியாது.

பரிசில்களைப் பிரித்துப் பார்த்து முடித்த சுரபி மாடிப்படிகளில் ஏறி சௌந்தர்யாவிடம் ஓடி வந்தாள்.

சௌந்தர்யா படுத்திருக்கும் நிலையைக் கண்டதும் அவளுக்கு “அம்மா ஏதோ சோகத்தில் படுத்திருக்கிறா என்று மட்டும் புரிந்தது.

“என்னம்மா அப்பா இங்க இல்லை எண்டு கவலையாக இருக்கா” சுரபி கேட்டாள்.

சுரபியைத் தடவிக்கொடுத்த சௌந்தர்யா “நீ இன்னமும் சின்னப்பிள்ளை. நீ வளர்ந்து பெரிய மனிசி ஆகிய பிறகு உன்னோட நான் நிறைய பேச வேண்டி வரும்.”

சௌந்தர்யா சொல்வதை பெரிதாக எடுத்துக்கொள்ளாத சுரபி “அப்ப பேசுவோமே” என்று சொல்லிவிட்டு மாடிப்படிகளில் இறங்கி கீழே ஓடினாள். ஆனால் சௌந்தர்யாவின் மனதோ நிம்மதியற்று ஒருநாள் சுரபிக்கு எல்லாம் தெரியும்போது அதை எப்படி எடுத்துக்கொள்வாளோ என்று நினைத்தவளாய் மெல்ல எழும்பி கட்டிலில் அமர்ந்தாள். ●

விஜயதர்சினி யோதிநாதன் (சைவப்புலவர்)







# லண்டனில் சிறப்பான நூற்றாண்டு விழா ‘செவாலியர் இளவாலை அமுது’ நூல் வெளியீடு

தமிழோடு தமிழுக்காய் வாழ்ந்து புலம்பெயர்ந்து வாழ்ந்த லண்டனில் தமிழான தமிழ்கங்கை மூதறிஞர் அமுதுப் புலவரின் நூற்றாண்டு விழாவும், லண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம் நிறுவனர் சிவ.தணிகாசலம் எழுதிய ‘செவாலியர் இளவாலை அமுது’ நூல் வெளியீடும் 02.06.2019 ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



நெடுந்தீவில் பிறந்து, இளவாலை அமுதுவாகி, லண்டனில் இலக்கியத்தோடும், தமிழை நேசிக்கும் இதயங்களோடும் கடைசிக் காலத்தைக் கழித்த புலவர் மணிக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாக புலம்பெயர்ந்த லண்டனில் முத்தமிழ் பணியாற்றி வரும் இலக்கிய சங்கமம், இலக்கியப் பெருவிழாவாக நடாத்தி மறைந்த ஈழத்தமிழ் இலக்கிய மேதைக்கு பெருமை சேர்த்திருக்கிறது.

கோடைகால இனிய மாலை விழாவுக்கு அழகூட்ட, அன்பான உபசரிப்புடன் ஆலயமண்டபம் நிறைந்திருக்க, சட்டத்தரணி ஏ.டி.இரத்தினசிங்கம் அவர்கள் நெறிப்படுத்த மங்களவிளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாகியது.

பன்னிசைமணி க.பரமசிவம் அவர்களுடைய தேவாரத்துடனும், சங்கீத கலாபூஷணம் கனகசபை சற்குணராஜன் தமிழ் வாழ்த்துப் பாடல், அமுதுவின் மடுமாதா காவிய பாடலுடனும் விழா மங்களகரமாக ஆரம்பிக்கப்பட்டது.




சிவஸ்ரீ கனக பாலகுமாரக் குருக்கள், சிவ.தணிகாசலம் அவர்களின் இலக்கிய சங்கமம் சேவை தொடர அம்மன் திருவடி பணிந்து அனைத்துச் சிவாச்சாரியர்கள் சார்பாகவும் ஆசி நல்கினார்.

தொடர்ந்து முன்னாள் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு.தா.யோகநாதன் வரவேற்புரை நிகழ்த்த திரு. எஸ்.ஸ்ரீரங்கன், திரு.பற்றிமாகரன், திரு.அ.தேவசகாயம், திரு. கந்தையா, இராஜமனோகரன் ஆசியுரை வழங்கினார்கள்.

மேலும், இந்நிகழ்வின் நாயகர் அமுதுவின் மகனார் ரொறொன்ரோ பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சந்திரகாந்தன் கனடாவில் இருந்து வருகை தந்து கருத்தாழமிக்க உணர்வுபூர்வமான உரையால் விழாவைக் கௌரவித்தார்.

அமுதுப்புலவரின் தமிழ்ப்பணிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் விரும்பிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் தமிழுக்கும் அமுதென்று பெயர் என்ற பாடலை நடன ஆசிரியை துஸ்யந்தி ஜெயானந்தனின் மாணவர்கள் புஸ்பாஞ்சலி நடனமாக வழங்கி சபையோரின் அதிகவனத்தை ஈர்ந்தார்கள்.

**செவாலியர் அமுது நூல்வெளியீடு**

சுவிசிலிருந்து பிரதான விருந்தினராக வருகை தந்திருந்த எழுத்தாளர் டாக்டர் கல்லாறு சதீஷ் தலைமையில், ‘செவாலியர் இளவாலை அமுது’ நூல் வெளியீடு நிகழ்வு நடைபெற்றது.

முதலில் கல்லாறு சதீஷ் அமுதுப்புலவருடனான நட்புறவை மிக உருக்கமாக, உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்து நெகிழ்வுற்றார்.

‘அமுதுவுக்குத் தணிகாசலம் வாய்த்தது போல் மற்றவர்களுக்கும் வாய்க்கப்பெற்றால் அது பெரும் பாக்கியம்” என்றார்.



தங்கத்தாத்தா என்று சிறப்பிக்கப்படும் ஈழத்து நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பேரனார் கலாநிதி இளமுருகனார் பாரதி அவர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து அனுப்பி வைத்த வாழ்த்துப்பாவை லண்டன் ஊடகவியலாளர் திரு. நடாமோகன் வாசித்தார்.

கலாநிதி முத்து முருகேசன் நூலை அறிமுகம் செய்து வைத்து ‘இது காலம் கடந்து அடுத்த தலைமுறையையும் நெறிப்படுத்தும் வல்லமையுடைய நூல்’ என்றார்.

நூல் பற்றிய ஆய்வுரையினை விரிவுரையாளர் சைவப்புலவர் திரு.க.சிவானந்தன் உயிர் உடல் ஆத்துமா என முப்பெரும் பிரிவாக வகுத்து, விரிவாகவும் ஆழமாகவும் இவர் ஆற்றிய உரை சபையின் பாராட்டைப் பெற்றது. ‘இப்புத்தகத்தின் மூலம் பழம்பெரும் அறிஞர் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய நிறையச் செய்தியை என்னால் அறிய முடிந்து” என்றார் அவர். அத்தோடு ‘அமுதுப்புலவரின் இளமைக்கால அபார ஞாபகசக்தி, அவர் கொண்டிருந்த அறிஞர் தொடர்பு வியக்கத்தக்கது’ என்றார்.

செல்வி அனன்யா இரஜீந்திரகுமார், இளந்தளிர் ஆற்றிய பேச்சின் தமிழ் வீச்சு வியப்பை, எதிர்கால நம்பிக்கையை விதைத்தது.

“இன்னும் 50 ஆண்டுகளின் பின்னர் 150வது அமுதுவின் நினைவு தினத்தை உனது தலைமையில் நடத்துவாயா?” தலைமை வகித்த கல்லாறு சதீஷ் கேட்க ஆம் என்று இந்த இளம்பிஞ்சு உறுதிமொழியளிக்க அரங்கம் கரவொலி எழுப்பியது.

திருமதி அஞ்சனா இராமதாஸ் ‘வாழ்வுச் செய்திகள் தாங்கிவரும் இந்நூல் இளைஞருக்கு ஒரு வழிகாட்டும் கையேடு’ என்றார்.



அமுதுப்புலவரின் பெரிய நிழற்படம் தாங்கிய அரங்கம் அவர் வரலாற்றை வரைந்த நூலால் நிறைய, முதற்பிரதியை நூலாசிரியர் வழங்கி நிற்க, கவிஞர் கந்தையா இராஜமனோகரன் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஆர்வத்தோடு சபையோர் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

தமிழுக்கு தொண்டாற்றும் சேவைக்குச் சான்றாக ‘தமிழ்நாயகம்’ எனும் **இலக்கிய சங்மம்** உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பிதா பேராசிரியர் சந்திரகாந்தன் பத்மநாப ஐயர், பேராசிரியர் கோபன் மகாதேவா, கவிஞர் டாக்டர் கல்லாறு சதீஷ், அரங்க ஆசான் நடராசா கண்ணப்பு, மறைந்த சைவப்பண்டிதை புனிதவதி பாலசுந்தரம், மூத்தப் பத்திரிகையாளர் பொன் பாலசுந்தரம், நாடகத்துறை திரு. திருமதி பாலேந்திரா ஆனந்தராணி தம்பதிகள், தமிழாய்வாளர்கள் திரு.திருமதி பற்றிமாகரன்-ரீற்றா தம்பதி, ராஜகோபால்

கௌரவமளிக்கும் இந்நிகழ்வை சட்டத்தரணி திரு. கு.சிதம்பரப்பிள்ளை நெறிப்படுத்தினார்.

திரு.இரவீந்திரமோகன் அவர்கள் இந்நிகழ்வை கூட்டாய் நிர்வகித்துச் சிறப்பித்தார்.

‘ஏறத்தாழ நூறாண்டு நிறைவாழ்வு வாழ்ந்த மூதறிஞர் அமுதுப்புலவர் வரலாற்றை நூலில் வடிப்பதென்பது சாதாரணவிடயமன்று. அவரின்




வாழ்வில் பாதிப்பையேற்படுத்திய வாழ்வுத் தடங்களைத் தேடியலைந்தேன். எத்தனை நையாண்டிகள் எத்தனை தடைகள், மூதறிஞர் தான்வாழ்ந்த இளவாலை மனை பற்றி சொல்லும்போது சுண்ணாம்புக்கல்லொன்றைத் தட்டினால், ஒவ்வொன்றும் அம்மா என்று கத்தும் சத்தம் கேட்கும் என்பார்.

நான் இலண்டனில் இருந்து இளவாலை நோக்கிப் பறந்தேன். அந்த மனை சென்றேன் ‘எங்கே அவர் சொன்ன அந்த சத்தம் கேட்கிறதா இப்போதும்?’ சுவரோரம் காதை வைத்தேன்.

அவர் மனையை விட்டுப் பிரிந்தபோது நெஞ்சில் அடித்துத் துயருற்றதே அந்த மாமரம் அதையும் என் கண்ணில் ஒற்றிக்கொண்டேன். அதுமட்டுமா? அமுது சாகரன் என்ற சிறுவன் ஓடியாடி அருவரி படித்த நெடுந்தீவு மண்ணைக்கூட நான் விட்டுவைக்கவில்லை. இவற்றையெல்லாம் தன் ஏற்புரையில் நூலாசிரியர் சிவதணிகாசலம் எடுத்துரைத்தபோது உற்றார் கண்கலங்கினர்.

அடுத்து இந்நூலுருப்பெற உதவியோருக்கு அம்மன் அருள்வேண்டி நன்றியுரையை நூலாசிரியர் நிறைவு செய்ய இராப்போசனம் தயாரானது.

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org



எமது ஆலயத்தில் பின்வரும் பணிகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் மேல் குறிப்பிட்ட மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

# வெற்றிடங்கள் மூன்று ஆலய சிவாச்சாரியார்கள் பதவிகள்

## HINDU RELIGIOUS WORKERS WITH NON-PASTORAL ROLE

### தகைமைகள்

விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.
சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவம் தேவை.

### ஓர் உதவி சிவாச்சாரியார் பதவி

சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவத்துடன், சுவாமி நெய்வேத்தியம், பூமாலை கட்டுதல், அலங்காரம் செய்தல் என்பனவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### வேதனம்

பிரித்தானிய அரச விதிகளுக்கு அமைய வேதனம் வழங்கப்படும். அடியார்கள் தட்சணை பகிர்ந்து வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30/07/2019**

### பின் வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கவும்

A) ஆலய அலுவலக உதவியாளர்கள்
(OFFICE ADMINISTRATORS)
FULL TIME AND PART TIME

B) பகுதி நேர கணனி வேலையாளர்
PART TIME TYPIST WITH
I/T KNOWLEDGE

**PLEASE DONATE FOR PRAYER HALL**

# தியான மண்டபம்

விரைவில் அமையவுள்ள தியான மண்டபத்துக்கான வேலைகள் யாவும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்!

இது பற்றிய காணிக்கைகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மேற்படி பதவிகளுக்குத் தகுதியானோர் மட்டும் விண்ணப்பிக்கலாம். இப்பதவிகள் தொடர்பான தகைமைகள், வேதனம் என்பனபற்றிய விபரங்களுக்கு தலைவர் / செயலாளர் ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.





# தமிழ் அறிஞரின் இரு ஆங்கில நூல்கள் லண்டனில் சிந்திக்க வைத்த வெளியீட்டு விழா

சைவத் தமிழர்களின் பொக்கிஷமாகப் போற்றப்படும் பெரியபுராணம் மற்றும் தமிழ் மூதாட்டி அவ்வையின் பாடல்கள் வரிகளின் உள்ளார்ந்த தத்துவங்களை விளக்கும் ஆங்கில நூல்களின் வெளியீட்டு விழா, லண்டன் சைவமுன்னேற்றச் சங்க மண்டபத்தில், சிறப்பாக நடைபெற்றது.

வழக்கறிஞரும், தமிழறிஞரும் இரு மொழிப் புலமையாளருமான செல்லத்தம்பி சிறீக்கந்தராசா *PERIYAPURANAM FOR THE COMMON READER, TAMIL VERSES OF WISDOM*, என்ற இவ்விரு நூல்களையும் எழுதியிருந்தார்.

பன்மொழிப் புலவர் பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களின் பாராட்டு விழாவும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் ஓர் அங்கமாக இடம் பெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்து செல்வி சாகித்தியா சிவபாலன் தமிழத்தாய் வாழ்த்துப் பாட, செல்விகள் அஞ்சலி, அஸ்வினி ரவிசங்கர் கடவுள் வாழ்த்துப் பாடினர்.


*PERIYAPURANAM FOR THE COMMON READER* ஆங்கில நூலை யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் தமிழியலறிஞர் மு.நித்தியானந்தன் ஆய்வு செய்தார்.

“அழகான ஆங்கில மொழி நடையில் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. முதல் நூலான தமிழ் பெரியபுராணத்தின் வழிநூல் இது”- என்ற அறிமுகத்துடன், நூலாசிரியரின் ஆழ்ந்தகன்ற தமிழ் புலமையும், ஆங்கில ஆற்றலையும் பாராட்டி நித்தியானந்தன் பெரிய புராணத்தின் முக்கியத்துவம் பற்றியும், சேக்கிழாரின் சாத்திரஞானம், வரலாற்று ஞானம், இலக்கியப் பயிற்சி பற்றியும் குறிப்பிட்டார். பெரிய புராணத்தின் காப்பிய நாயகர்களான நாயன்மார்கள் சிலரின் நம்பற்கரிய பக்தி வைராக்கியத்தையும், இயற்கைக்கு மாறான அதீதமான இயல்புடன் பக்தர்கள் நடந்து கொண்டதாக கூறப்படும் சம்பவங்களை இக்கால இளைஞர்கள் நம்பத் தயாரில்லை என்று கூறினார்.

நித்தியானந்தன் உரை நிறைவுற்றதும்- விழாத் தலைவர் தன் கருத்தை வெளியிட்டார். சிறுத்தொண்டர் நாயனார், சக்தி நாயனார், கண்ணப்ப நாயனார் போன்றோர் செயல்கள் பற்றி குறிப்பிட்டவை சரியானதல்ல. தவமும் தவமுடையார்க்கே ஆகும் என்பதுபோல பக்தியின் பித்தப் போக்கைப் பத்திநெறி நிற்கின்ற உத்தமர் அன்றி ஏனையோர் உணர்வது கடினம் என்று கூறி, நாயன்மார் எவரும் வெறியர்கள் அல்லர் என்றும், அவர்கள் பற்றற்றானை பற்றியமையால், ஏனைய பந்த பாசப்பற்றுக்கள், கண்படுப்பார் கைப்பொருள்போல் தாமாகவே கழலப் பெற்றவர்கள் என்றும் சுருக்கமாகக் கூறிய விளக்கம் சபையின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தது.











பேராசிரியர் மருதநாயகம், *TAMIL VERSES OF WISDOM* நூலைப் பற்றி ஆய்வு நிகழ்த்தினார்கள். அவ்வையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய பாடல்களுக்கான ஆங்கில விளக்கங்களையும், தமிழ் விளக்கங்களையும் கொண்ட நூல் இது. தமிழர் பேணிக்காத்த தமிழ் அறங்களை, பசுமரத்தாணி போல மக்கள் மனங்களில் நிலைபெறச் செய்கின்ற ஆற்றல் கொண்ட பாடல்கள்தான் அவ்வையின் இப்பாடல்கள். இந்த ஆங்கில நூலுக்கு ஆங்கிலத்தில் முன்னுரை எழுதியுள்ள மருதநாயகம், தமிழர் போற்றி வந்த அறங்களை, வடநாட்டார் சாற்றி வந்த அறங்களோடு ஒப்பிட்டுப் பேசி தமிழரின் அறக்கோட்பாடு ஈடு இணையற்றது என்றார். அந்தக்கூற்றை நிலை நாட்டுகின்ற வகையில், ஆளுக்கொரு நீதியும், நேரத்துக்கொரு சமாதானமும் பெறுகின்ற வடநாட்டு மனுநீதி சாத்திரத்தில் அடங்கியுள்ள காலத்துக்கொவ்வாத, சாதிப் பாகுபாடும், மனிதாபிமானமற்ற நீதியும் பேசுகின்ற சிலவற்றை எடுத்துக் கூறினார்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆங்கிலப் பேராசிரியராகக் கடமையாற்றிய ப.மருதநாயகம் அவர்களுக்கு பாராட்டுரை நிகழ்ந்தது. அந்தப் பாராட்டுரையை நூல்களின் ஆசிரியர் சிறீக்கந்தராசா, ஆங்கிலத்தில் வழங்கி, ஆங்கில, தமிழ் இலக்கிய பேராசிரியரான மருதநாயகம் அவர்களை பெருமைப்படுத்தினார்.

ஆர்ப்பாட்டமில்லாத ஆழமான அகலமான பன்மொழி அறிஞன் என்றும் பலதிறப்படப் பேசிய சிறீக்கந்தராசா, பேராசிரியருக்குரிய மதிப்பைத் தமிழகம் இதுவரை கொடுக்கவில்லை என்றும், தமிழகமும் இந்திய மத்திய அரசும் அவரது தகுதியையும் தகைமையையும் உலகறியப் போற்ற வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

உலகத் தமிழறிஞனாக உயர்ந்து நிற்கின்ற பேராசிரியர் மருதநாயகம் அவர்களுக்கு இலண்டன் வித்துவான் வேலன் இலக்கிய வட்டம் சார்பில் லண்டன் ஸ்ரீமுருகன் கோயில் பிரதமகுரு கயிலை நாகநாத சிவம் தலைப்பாகை கட்டி, பொற்பதக்க மாலை அணிவித்தார். கயிலை நாகநாத சிவம், பிரம்மஸ்ரீ வசந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ கமலநாதக்குருக்கள் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.



லண்டன் சைவமுன்னேற்றச் சங்க வி.ஆர்.இராமநாதன், ‘சிவயோகம்’ நா.சீவரத்தினம் ஆகியோருக்கு நூல்களை அச்சிட்டு, வெளியிட்டமைக்காக மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த மதிப்பை ஏற்றுக்கொள்ளும் வகையில் வி.ஆர்.இராமநாதன் சிறப்புரை ஆற்றினார். இளம் வயதிலிருந்தே பெரியபுராணத்தின் மீதிருந்த ஈடுபாடும் அவரது இந்த ஆங்கில நூலை அச்சிட்டு வெளியிட வைத்தது என்று பெருமையுடன் கூறினார்.

நூலாசிரியர் மகன் அருணன் சிறீக்கந்தராசா ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்றியுரை வழங்கினார். ●





கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

## தூயதிருக்கவே தீயதெப்படிடா!

பெரிய தோர் உலகமடா
அதிலே
எத்தனை கலகமடா;

சிறிய தோர் மனதிலடா
அங்கே
எத்தனை கலக்கமடா;

அன்பு வம்பில் சிக்கியே
தவிக்குதடா
பாசம் வேஷம் தரித்துமே
அலையுதடா;

பண்பு தான் பாவமென்றே
பரிதவிக்குதடா
கருணை பார்த்துப் பார்த்தே
ஒடித்தப்புதடா;

தன்மை குனிந்த வடிவுடனே
போகுதடா
நன்மை ஒடிந்த வண்ணமே
ஒதுங்குதடா;

மெய்மை யென்று ஏசிடவே
மனமாகுதடா
பொய்மை ஒன்று பேசிடவே
குணமாகுதடா;

கற்பை விலை பேசியே
கல்யாணமாகுதடா
கற்ற அறிவு கூடவே
கருத்திலில்லையடா;

நல்லொழுக்கம் இழுக்
கென்பதே
நாகரீகமடா
நற்பழக்கம் பழு தென்பதே
கலிகாலமடா;

மக்க ளாட்சியை ஏற்றே
ஓட்டுவிழுகுதடா
மக்களை யேமாற் றுதலே
அரசியல்லாபமடா;

கடவுளைத் தேடிய படியே
மனிதரடா
குற்றங்கள் கூடி வந்தே
வினவுதடா,

என்ன இருந் தாலுமே
அது எப்படி யிருந்தாலுமடா
தூய திரு க்கவே
தீயதால் எதுவும் முடியாதடா;

தீயதின் இருப் பிடமே
தூயதின் பிறப்பிடமடா
நீதியின் மகத் துவமே
அநீதியின் இறப்பிடமடா.

# போகிற போக்கில்...




ஏ.ஜே.ஞானேந்திரன்



## 300 பேரை பலிகொண்ட எவரெஸ்ட்

சுத்திகரிப்பு திட்டம் முடிவுக்கு வந்துள்ளது. உலகின் அதி உயர்ந்த மலையான எவரெஸ்டிலிருந்து சுமாராக 11தொன்(10,000கி.கி) எடை கொண்ட கழிவுகளைச் சேகரித்து தரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். இதில் ஒக்சிசன் சிலின்டர்கள் தொடக்கம், வெற்று ரின்கள், போத்தல்கள் என்று பல ரகப்பட்ட கழிவுகள். அலுமினிய ஏணிகள், சமையல் பாத்திரங்கள் போன்றனவும் கீழே கொண்டு வரப்பட்டுள்ளன. மீள்சுழற்சிக்காக இதில் ஒரு பகுதி , காட்மன்டு நகருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 6100 மீற்றர் உயரத்திலுள்ள சுடாரம்1, சுடாரம்2(6400மீ.) இல்தான் அதிக கழிவுகள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அனேகமானவர்கள் இங்குதான் தங்கியிருந்து தங்கள் நெடும் பயணத்தைத் தொடர்கிறார்கள். இப்பொழுது பனி உருகும் காலம் என்பதால், இதுகாலவரை பனியில் மறைந்திருந்த நால்வரது இறந்த உடல்களும் கண்டெடுக்கப்பட்டு, ஆள் அடையாளத்திற்காக, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 1953இல் முதற் தடவையாக எவரெஸ்ட் உச்சியை அடைந்த காலந் தொடக்கம் இன்றுவரையில் 300 பேர் மலையேறும்போது மரணித்துள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இன்னும் எத்தனை உடல்கள் மலையில் இருக்கின்றன என்பது பற்றிய புள்ளி விபரங்கள் தம்மிடம் இல்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். 14பேர் அடங்கிய ஒரு குழுவொன்றை அரசு, ஆறு வாரங்களுக்கு, கழிவுகளைச் சேகரிக்கும் பணியில் அமர்த்தியிருந்தது. மலைஉச்சி வரை உள்ள 4 முகாம்களிலிருந்து(சுமாராக 8000மீற்றர் உயரம் வரை) கழிவுகள் சேகரிக்கப்பட்டன.மலைச் சிகரம் 8850மீ. உயரத்தில் இருக்கின்றது.



## ஒரு புன்முறுவலுக்கு 30 மில்லியனா?

போர்த்துக்கல் நட்சத்திர காற்பந்தாட்ட வீரர் றொனால்டோ விளையாட்டால் கொள்ளை கொள்ளையாக சம்பாதிப்பது உங்களுக்கு தெரியும். இந்த இரண்டு கால்களையும் கொண்டுதானே இந்தச் சம்பாத்தியம்? எனவே அந்தக் கால்களும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. 144 மில்லியன் டொலர் தொகைக்கு இவரது கால்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் இங்கிலாந்தின் நட்சத்திர காற்பந்தாட்ட வீரராக இருந்த டேவிட் பெக்ஹாம் காப்புறுதி செய்த தொகையை விட(70 மி. டொலர்) இவர் தொகை அதிகம் . அவர் விளையாட்டு வீரர்.இன்னொரு பிரபல்யமான ஜெனிபர் லோப்பெஸ் எந்த உடல் உறுப்பை காப்புறுதி செய்துள்ளார் தெரியுமா? நடிகையும் பாடகியுமான இவர் தன் "பின்புறத்தை" 300 மில்லியன் டொலர் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளாராம். நடிகையும் , மாடலிங் செய்பவரும் வர்த்தகப் பிரமுகருமான கிம்கார்டஷியான் தனது "பின்புறத்தை" 21 மில்லியன் டொலருக்கு காப்புறுதி செய்துள்ளார். தனது அழகான புன்சிரிப்பை 30 மில்லியன் டெலர் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார் ஹாலிவுட் பிரபல்யமான ஜூலியா றொபேர்ட்ஸ். ஜேம்ஸ் பொன்ட் பிரபல்யமான டானியல் கிரெய்க் தன் உடலை 9.5மி. டொலருக்கு காப்புறுதி செய்துள்ளார். விசித்திரமான உலகந்தான்!!



## நேர்முகத் தேர்வுக்கு உதவும் கோப்பிக் கிண்ணம்

மேலைநாடுகளில் புதியதொரு விண்ணப்பதாரியை தெரிவு செய்யும்போது வித்தியாசமான முறையில் தேர்வு நடக்கின்றது. ஒரு கப் கோப்பி இவர்கள் தலைவிதியை நிர்ணயிக்கின்றது. அவுஸ்திரேலியாவில்தான் இந்த வித்தியாசமான நேர்முகத் தேர்வு இடம்பெறுகின்றது. நேர்முகத் தேர்வுக்கு வருபவரிடம் எப்படியோ முதலில் ஒரு கப் கோப்பியைக் கையில் கொடுத்து விடுகிறார்க்ள. (அது வேறு குடிபானமாகவும் இருக்கலாம்.)

நேர்முகத் தேர்வுக்கு வருபவரை சமையலறைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கிருந்து அவர் வெளியே வரும்போது, கையில் எப்படியோ ஒரு கப் குடிபானம் போய்ச் சேர்ந்து விடுகின்றது. நேர்முகத் தேர்வு முடிந்ததும், விண்ணப்பதரி, தான் கையில் கொண்டு வந்த கிண்ணத்தை என்ன செய்கிறார் என்பதைப் பொறுத்தே, அவரது தேர்வு உறுதிப்படுத்தப்படுகின்றது.வெற்றுக் கிண்ணத்தை மேசையில் விட்டுச் செல்கிறாரா அல்லது கையில் எடுத்துச் சென்று, சமையலறையில் பொறுப்பாக வைக்கின்றாரா , கழுவி வைக்கிறாரா என்பதும் கவனிக்கப்படும். பல திறமைகளை நாம் வளர்த்துக் கொள்ளலாம். நாம் குடித்த கோப்பையை, சாப்பிட்ட கோப்பையை நாமே கழுவி வைக்கும் பழக்கம் நம்மிடம் உண்டா என்பதும் முக்கியம். எனவே ஒருவரது தேர்வுக்கு , இங்கேயும் மேலதிக புள்ளிகள் பெறமுடியும் என்கிறார் நேர்முகத் தேர்வை மேற்கொள்ளும் அதிகாரி!





## படப்பிடிப்புத் தளத்தில் குண்டுவெடிப்பு

புதிதாகத் தயாராகிக் கொண்டிருக்கும் ஜேம்ஸ் பாண்ட் திரைப்படத்தின் படப் பிடிப்பு, தடை தாண்டிப் பாய்ச்சல்போல, பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கின்றது. இந்தத் தடவை திரைப்படத்தில் வருவது போல நிஜத்தில் குண்டு வெடிப்புகள் மூன்று ,படப்பிடிப்புத் தளத்தை அதிர வைத்துள்ளன. சிலர் காயப்பட்டும் உள்ளார்கள். மேற்கூரை பிய்த்தெறியப்பட்ட ஒரு குண்டுவெடிப்பில், ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. ஆபத்தான காட்சிகளில் கதாநாயகனுக்கு பதிலாக "ஸ்டன்ட்" வேலை ஒன்றை செய்யும்போதே இந்த வெடிப்புகள் சம்பவித்துள்ளன.படப்பிடிப்புத் தளம் அதிர்வால் சரிந்துவிழுந்து அதில் ஒருவர் அகப்பட்டுள்ளார். இந்தப் புதிய ஜேம்ஸ் பாண்ட் திரைப்படப் பிடிப்பு ஆரம்பித்த காலம் தொடக்கம் பல வழிகளில் பிரச்சினைகள் உண்டாகி வருவதாக சொல்லப்படுகின்றது. இது 25வது ஜேம்ஸ் பாண்ட் திரைப்படமாகும். முன்பொரு தடவை கதாநாயகனான டானியல் கிரெய்க்(51) படப்பிடிப்பு சமயம் தவறி விழுந்ததால் காய்ப்பட்டு, ஒரு வார காலம், இவர் படப்பிடிப்பில் கலந்து கொள்ளவில்லை.மூன்று வாரங்களுக்கு முன்பு ஜமேக்காவில் படப்பிடிப்பு நடந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த மார்ச் மாதம் திரைப்பட இயக்குனர் எழுதப்பட்ட கதைவசனம் சம்பந்தமான ஒரு முரண்பாட்டில்,தான் குழுவை விட்டு விலகுவதை உறுதிப்படுத்தியிருந்தார்.

## குதிகாலணிக்கு ஒரு கும்பிடு

வேலைக்கு வரும்போது குதிகாலணி அணிவதை எதிர்த்து, ஒரு குழுவாக ஜப்பானிய பெண்கள் அரசிடம் தங்கள் எதிர்ப்பு மனுவைச் சமர்ப்பித்துள்ளார்கள். கட்டாயமாக குதிகாலணி அணிந்து அலுவலகத்திற்கு வரவேண்டும் என்பதையே இவர்கள் எதிர்க்கிறார்கள்..

எழுத்தாளரும் நடிகையுமான யுமி இஸிகாவா இணையத்தில் இந்த எதிர்ப்பை ஆரம்பித்து வைத்த பின்னர், உடனுக்குடன் 19,000 ஜப்பானிய பெண்களின் ஆதரவு இவருக்குக் கிடைத்துள்ளது. பல நிறுவனங்களில் பணியாற்றவும், புதியதொரு வேலை தேடவும் குதிகாலணி அணிவது என்பது இங்கு கட்டாயமாகி உள்ளதாக பெண்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே இதைத் தடைசெய்ய சட்டம் கொண்டுவரும்படி, அமைச்சு அதிகாரிகளிடம் விண்ணப்பித்திருக்கிறோம் என்கிறார் இஸிகாவோ. தன்னை ஒரு பெண் அதிகாரியே சந்தித்ததாகவும், முதற்தடவையாக எங்கள் குரல்கள் செவிசாய்க்கப்பட்டுள்ளன என்று மகிழ்வோடு கூறுகிறார் இவர். 2015இல் பிரான்ஸில் இடம்பெற்ற பெற்ற உலகத் திரைப்பட விழாவின்போது, உயர்ந்த பாதங்களைக் கொண்ட காலணிகள் அணியாதவர்களை செங்கம்பளத்தில் நடக்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

பின்பு திரைப்பட விழா இயக்குனர்இதற்காக மன்னிப்புக் கோரியிருந்தார். 2017இல் கனடிய மாவட்டமான பிரிட்டிஷ் கொலம்பியா. உயர்ந்த பாதக் காலணிகள் ஆரோக்கியத்திற்கு கேடானவை என்று கூறி , நிறுவனங்கள் இதை அணிவதற்கு பெண்களை வற்புறுத்த தடை விதித்திருந்தார்கள்.



எம்.ரி.செல்வராஜா

# லண்டனில் ஊரின் பெருமைகள் பேசி மகிழ்ந்த இணுவில் ஒன்றியம்

இலண்டனில் கடந்த 27.05.2019 அன்று இணுவில் ஒன்றியத்தின் பிரித்தானிய கிளையினரால் *Wembley Aberton Community* பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஒன்றுகூடலில் கலை நிகழ்வுகளும், சாதனையாளர் விருதுகளும், சேவைநலன் பாராட்டுதலும், பட்டிமன்றமும் சிறப்பாக நடைபெற்றன.



தமிழ்த்தாய் வாழ்த்துடன் 3.00 மணியளவில் ஆரம்பித்த நிகழ்வு மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் ஆரம்பம் முதலே களைகட்ட ஆரம்பித்தது. இணுவிலில் பிறந்து இப்போது இலண்டனில் வாழ்ந்துவரும் திருமதி அபிராமி கிரிஷான் அவர்களின் மாணவிகள் ஆரம்பத்தில் அற்புதமான நடன விருந்தளித்தனர்.



'எதற்கும் உருகாதவன் இசைக்கு உருகுவான்" இதற்கமைய இனிய குரல்வளம் இணுவில் பாடகர்கள் திரு.ஜோதிநாதன் செல்வி நிவேதா பாலகுமார் இருவரும் இணைந்து காதுக்கினிய புதிய, பழைய சினிமாப் பாடல்களை இனிமையாகப் பாடி சபையோரை மகிழ்வித்தனர்.

சைவத்திற்கும், தமிழிற்கும், கலைக்கும், தாயக மக்களின் துயர்துடைக்கவும் நீண்ட காலமாக சேவையாற்றிவர்களுக்கான வாழ்த்தும், கௌரவமும் அடுத்து அரங்கத்தை அலங்கரித்தது. Dr.இரத்தினம் நித்தியானந்தன், திரு.நடராசா சச்சிதானந்தன், திரு. இராஜசிங்கம் ஜெயதேவன், திரு.செல்வரத்தினம் சுரேஷ், திரு.மயில்வாகனம் சூரியசேகரம், திரு.வேலுப்பிள்ளை சிவசுந்தரம், திரு.சென்.கந்தையா, பரதசூடாமணி திருமதி கௌசல்யா ஆனந்தராஜா, திரு.சண்முகநாதன் சபேசன் ஆகியோர் அவர்களது தன்னலமற்ற வேவைகளுக்காக வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கௌரவத்தினை கம்பவாருதி திரு.ஜெயராஜ் அவர்கள் கைகளால் வழங்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் அவரால் தவிர்க்க முடியாத காரணங்களினால் வரமுடியாதிருந்த போதிலும் அவரின் தலைசிறந்த வாரிசான தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த விரிவுரையாளரும், தமிழ், ஆன்மீக சொற்பொழிவாளருமாகிய 'செந்தமிழ்ச் சொல்லருவி" திரு.சந்திரமௌலீசன் லலீசன் கைகளினால் வழங்குவது மிகவும் மகிழ்ச்சி தரும் ஒன்றாக அமைவதாக விழாவை ஏற்பாடு செய்து வழிநடாத்திக்கொண்டிருந்த 'இசைப்பித்தன்" திரு பதஞ்சலி நவேந்திரன் அவர்கள் மகிழ்வோடு கூறினார்.

கௌரவம் பெற்ற அனைவர் சார்பிலும் பேசிய திரு மயில்வாகனம் சூரியசேகரம் அவர்கள் 'இப்படியான வாழ்த்துக்களும், கௌரவங்களும் மேலும் மேலும் மக்களுக்காக பணியாற்றவேண்டும் என்கின்ற உந்து சக்தியை உள்ளத்தில் ஏற்படுத்துகிறது" என்று குறிப்பிட்டார்.



அடுத்து 'இன்றைய புலம்பெயர் தமிழர்களின் தடுமாறிய வாழ்வுக்கு யார் பொறுப்பு?" என்ற தலைப்பில், தாயகத்திலிருந்து இலண்டன் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் மகாநாட்டிற்;கென அழைக்கப்பட்டிருந்த 'செந்தமிழ்ச் சொல்லருவி" திரு.சந்திரமௌலீசன் லலீசன் அவர்களின் தலைமையில் 'சுழலும் சொற்போர்" ஒன்று நடைபெற்றது. 'தர்ம ஸ்தாபனங்களே" என்ற தலைப்பில் திரு.A.R.சிறீதரனும், 'பெற்றோர்களே" என்ற தலைப்பில் இலண்டனில் பிறந்து வளர்ந்துவரும் *Oriental Fine Arts* தமிழ்ப்பாடசாலையின் மாணவி செல்வி குகப்பிரியா கிருபாலரட்னம் அவர்களும், 'அடுத்த தலைமுறையினரே" என்ற தலைப்பில் நானும், 'அரசியல் வழிநடத்துனர்களே" என்ற தலைப்பில் திரு.கந்தையா ஸ்கந்தமூர்த்தி அவர்களும், 'ஆலயங்களே" என்ற தலைப்பில் Councillor திரு.நந்தா பரம் அவர்களும், 'தாயக மக்களே" என்ற தலைப்பில் கவிஞர் திரு.கந்தையா இராஜமனோகரன் அவர்களும் தங்கள் வாதங்களை சிறப்பாக எடுத்து வைத்தனர்..

'செந்தமிழ்ச் சொல்லருவி" திரு.சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் தாயத்தில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம் என பல மன்றங்களின் நடுவராகவும், பேச்சாளராகவும் பல அரங்குகளைக் கண்டவர், காண்கின்றவர். கம்பவாருதியுடன் இணைந்தும், தனியாகவும் தமிழ், ஆன்மீகப் பணிகளை தொடர்ந்தும் ஆற்றி வருபவர். இப்படியான ஒருவர் இணுவில் ஒன்றியத்தின் அன்றைய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தமை மிகவும் பொருத்தமாக இருந்தது.

இணுவில் ஒன்றியத்தின் சேவை பாராட்டுதற்குரியது.

வாழும்போதே வாழ்த்துவதும் இப்போது வழக்கமாகிக்கொண்டு வருகின்றது. அதிகமான ஆலயங்களைக் கொண்ட ஊர் இணுவில் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். தமது ஊரின் பெருமைகளைக் கூறி மகிழ்ந்தார்கள். நாமும் மகிழ்ந்தோம்.

இந்த விழாவினை நடாத்தவேண்டும் என்று பல பொறுப்புக்களைச் சுமந்து, பாடுபட்டவர்களில்



முதன்மையானவர் திரு.பதஞ்சலி நவேந்திரன். எல்லோரையும் இலவசமாகவே வரவழைத்து, விழாவெடுத்து, வாழ்த்தி, உணவூட்டி வழியனுப்பி வைத்தார். வங்கி விடுமுறையில் நல்லதொரு நிகழ்வைக் கண்டு, கலந்து, மகிழ்ந்து மன மகிழ்வைத் தந்தது. இணுவில் மண்ணின் விருந்தோம்பல் சிறப்பையும் பறைசாற்றி நின்றது.









# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

**5 Chapel Road, West Ealing, London W13 9AE**
தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485,
**Email: info@ammanealing.org web:www.ammanealing.org**



## மகோற்சவ விஞ்ஞாபனம் 2019

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோயில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அவர்களின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான விகாரி வருடம் ஆடி மாதம் 2ம் நாள் 18.07.2019 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 03ம் நாள் வெள்ளிக்கிழமை (19.07.2019) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 11.08.2019 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 02.08.2019 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 14.08.2019 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது.

**கொடியேற்றம் 19.07.2019 வெள்ளி காலை 9.30 மணி** | **இரதோற்சவம் 11.08.2019 ஞாயிறு (தேர்) காலை 10.00 மணி**

### மகோற்சவ நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 19.07.2019 | வெள்ளி | கொடியேற்ற அருட்காட்சி காலை 9.30 மணி |
| 20.07.2019 | சனி | இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி |
| 21.07.2019 | ஞாயிறு | கனகதாரா இலட்சுமி அருட்காட்சி |
| 22.07.2019 | திங்கள் | நாகபூசணி அம்பாள் அருட்காட்சி |
| 23.07.2019 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி |
| 24.07.2019 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி |
| 25.07.2019 | வியாழன் | அர்த்தநாதீஸ்வர அருட்காட்சி |
| 26.07.2019 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி |
| 27.07.2019 | சனி | அன்னைபூர்ணாம்பிகை அருட்காட்சி |
| 28.07.2019 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி |
| 29.07.2019 | திங்கள் | சௌபாக்கியா அம்பிகை அருட்காட்சி |
| 30.07.2019 | செவ்வாய் | காமாட்சி அம்பாள் அருட்காட்சி |
| 31.07.2019 | புதன் | அனந்தசயன அருட்காட்சி |
| 01.08.2019 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி |

| | | |
|---|---|---|
| 02.08.2019 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 03.08.2019 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 04.08.2019 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 05.08.2019 | திங்கள் | சந்தான பாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கதரப் பவனி) |
| 06.08.2019 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 07.08.2019 | புதன் | ஓங்காரரூப அருட்காட்சி |
| 08.08.2019 | வியாழன் | மகாதுர்க்க தரிசன அருட்காட்சி |
| 09.08.2019 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 10.08.2019 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 11.08.2019 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்) காலை 10.00 மணி |
| 12.08.2019 | திங்கள் | தீர்த்த உற்சவம் அருட்காட்சி |
| 13.08.2019 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி |
| 14.08.2019 | புதன் | வைரவர் மடை |